சங்கீதம் 85

# கர்த்தாவே, எங்களை உயிர்ப்பியும்

**40-நாள் உபவாசம் & ஜெபம்**

2016

7 ஆகஸ்ட் - 15 செப்டம்பர்

NECF MALAYSIA

ADULT EDITION

# கர்த்தாவே, எங்களை உயிர்ப்பியும்



# உள்ளடக்கம்



உள்ளடக்க வரிசை 2
சங்கீதம் 85 3
முன்னுரை 4
உண்மையான ஜெபம் என்றால் என்ன? 6
நாள் 1-5: ஜெபத்தைப்பற்றி புரிந்துகொண்டதை மீள்பார்வை செய்தல் 8
நாள் 6-10: தேவனின் கோபாக்கினை 13
நாள் 11-15: தேவனின் இரக்கம் 18
நாள் 16-20: எழும்பி கட்டு 23
நாள் 21-25: ஜெப பீடங்கள் 28
நாள் 26-30: தேவனின் சத்தம் 33
நாள் 31-35: எழுப்புதல் 38
நாள் 36-40: எழுப்புதல் வரும்பொழுது 43
ஒப்புதல் 48

## சங்கீதம் 85

1. கர்த்தாவே, உமது தேசத்தின் மேல் பிரியம்
வைத்து, யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்பினீர்.
2. உமது ஜனத்தின் அக்கிரமத்தை மன்னித்து,
அவர்கள் பாவத்தையெல்லாம் மூடினீர். (சேலா.)
3. உமது உக்கிரத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு,
உமது கோபத்தின் எரிச்சலை விட்டுத் திரும்பினீர்.
4. எங்கள் இரட்சிப்பின் தேவனே, நீர் எங்களைத்
திருப்பிக்கொண்டு வாரும், எங்கள் மேலுள்ள உமது
கோபத்தை ஆறப்பண்ணும்.
5. என்றைக்கும் எங்கள் மேல் கோபமாயிருப்பீரோ?
தலைமுறை தலைமுறையாக உமது கோபத்தை
நீடித்திருக்கப் பண்ணுவீரோ?
6. உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர்
எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?
7. கர்த்தாவே, உமது கிருபையை எங்களுக்குக்
காண்பித்து, உமது இரட்சிப்பை எங்களுக்கு
அருளிச்செய்யும்.
8. கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன்.
அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய
பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார்.
அவர்களோ மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்பார்களாக.
9. நம்முடைய தேசத்தில் மகிமை வாசமாயிருக்கும்படி,
அவருடைய இரட்சிப்பு அவருக்குப்
பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது.
10. கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று
சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று
முத்தஞ்செய்யும்.
11. சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும், நீதி
வானத்திலிருந்து தாழப்பார்க்கும்.
12. கர்த்தா நன்மையானதைத் தருவார்.
நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும்.
13. நீதி அவருக்கு முன்னாகச்சென்று, அவருடைய
அடிச்சுவடுகளின் வழியிலே நம்மை நிறுத்தும்.

# எங்களை உயிர்ப்பியும் ஓ கர்த்தாவே

இந்த சங்கீத பாடல்களின்வழி மலேசிய சபையுடன் ஒப்பிடும்பொழுது நமது தேசத்தில் நிகழ்ந்த பெருங்கேடுகளையும் பேரிடர்களையும் தேவ கோபாக்கினையின் வெளிப்பாடுகள் என வர்ணிக்கலாம்.

அநேக வேளைகளில் நமது ஜெபங்கள் வழி விலகிப்போகும் காரணம் தேவனுடைய பரிசுத்த கோபாக்கினையை முழு அளவில் புரிந்து கொள்ளத் தவறி விடுகிறதினால்தான். நமது சபை நலன் குன்றியிருப்பதின் பிரதிபலிப்புதான் நமது தேசமும் ஷேமமின்றி இருக்கிறதற்கான காரணம் என ஏற்றுக்கொள்ள நாம் மறுக்கிறோம். நம் மேலுள்ள தேவனுடைய கோபத்தை ஆறப்பண்ணும்  விதத்தில் நம் ஜெபம் இல்லாது போகும் போது தான் ஜெப பீடத்தில் வெறுமையான வார்த்தைகளை அளப்புகிற குற்ற உணர்வுடையவர்களாயிருக்கிறோம். காலியான, வீணான வார்த்தைகளை அளப்புகிறது சுகந்த ஜெப தூபமாயிராது

நமது சொகுசு வாழ்க்கைக்கு வேண்டி விடாப்பிடியாக நாம் கதறி ஜெபிக்கும் முறைமையைவிட சங்கீதக்காரன் விண்ணப்ப அழுகை வேறுபட்டிருக்கிறது. அவர்களுடைய புலம்பல் அங்கே, அப்பொழுதே எழுப்புதல் எனும் மன்றாட்டு அல்ல ஆனால் அது தேசிய அளவில் திருப்பத்தைக் கொண்டு வருவதற்காகும் (வ 1,9,12). அவர்களின் ஒரே கவனம் தேசத்திற்காகவும் மறுமடியும் திருப்பும்படிக்காகும் (வ 1,4) எழுப்புதலுக்கான நமது பொதுவான ஜெபம் அதனைக் கொண்டுவராது திரும்புதலுக்கு வாஞ்சிக்காமல் மாற்றம் வரவேண்டும் என நாம் விரும்புகிறோம். நமது இல்லத்திற்கும், ஸ்தல சபைக்கும், நமது ஜீவிய பாணிக்கும் அப்பாற்பட்டு தேசத்திற்கும் அதின் இரட்சிப்பிற்கும் நமது தரிசனம் செல்லாவிட்டால், எங்களை எழுப்பும் எனும்

[1]Expositor’s Bible Commentary

நம்முடைய ஜெபத்திற்கு நிச்சயம் பதில் கிடையாது.

இரு, மறுபடியும் நீர் எங்களை உயிர்ப்பிக்கமாட்டீர் - வ 6

தேவனுடைய கிருபையை அவருடைய சத்தியத்தினின்று பிரித்து விட முடியாது. வசனம் 10ல் கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும் என்றும், சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும் என்றும் சங்கீதக்காரன் கூறுகிறான். நாம் கத்திக் கதறினாலும் கிருபையானது செயல்பட அது ஒரு மந்திர வார்த்தையும் அல்ல தேவன் நமக்காக அசைவதற்கு அவர் கடன்பட்டவருமல்ல. அன்பும் மற்றும் இரக்கம் குறித்த நமது குறைந்த இறைமார்க்க அறிவினால் தேவன் பதட்டப்படுகிறவரும் அல்லர். நமது தேசத்தில் மாற்றம் வரவேண்டி நமது மன்றாட்டு மறுமொழியில் சத்தியத்தையும் நீதியையும் அவர் பெரிதும் எதிர்பார்க்கிறார்.



மலேசிய சபை சில முக்கிய கேள்விகளைக் கேட்டுக் கொள்ள வேண்டும்:

(1). நாட்டில் ஊழல் நடைபெறுவதற்கு நாமும் பங்குள்ளவர்களா? கிறிஸ்தவ வணிகர்கள் ஊழல் புரிகிறவர்களா? நல்வழியில் வராத தசமபாகங்களை சபை சந்தோஷமாக பெற்றுக்கொள்ளுகிறதா, அல்லது கண்டிப்பதற்கு துணிவில்லாமல் இருக்கிறதா?

(2) சீர்பொருந்தாமலும் நீதியில்லாமலும் எழுப்புதலைத் தேடுகிறோமா? ஆபாசங்களும் ஓரின சேர்க்கையும் ஆசிய கலாச்சாரத்தை ஊடுருவும்போது, சபையின் ஆவேசக் குரல் எங்கே? தேவன் விரும்புகிற வழியில் அல்லாமல் சீர்பொருந்தல் நடக்க வேண்டும் என நாம் ஆர்வமாயிருப்பதில் குற்ற உணர்வு கொண்டிருக்கிறோமா?

(3) அவருடைய இரட்சிப்பு, அவருக்கு பயந்தவர்களுக்கு சமீபமாயிருக்கிறது - வ9. ஆயினும் இன்றும் ஆர்வமற்ற சபை கூடுதல், பயபக்தியற்ற ஆராதனை, சீஷத்துவம் இல்லாத தலைமைத்துவம் போன்றவற்றைக் கண்கூடாகக் காண்கிறோம். தேவனுக்குப் பயந்த சபைகள் எத்தனை நம் மத்தியில் இருக்கின்றன?

எங்களை உயிர்ப்பியும் என நாம் ஜெபிக்கிறோம். ஆனால் ஒரு வேளை கர்த்தாவே, உமது கிருபையை எங்களுக்குக் காண்பித்து, உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும் என ஜெபிப்பதே சாலச்சிறந்ததாக இருக்கும் - வ 7.

உபவாசமானது ஜெபத்திற்கு ஏற்ற ஒரு வல்லமையான கருவி என அப்படியாக பலர் புரிந்து கொண்டிருக்கின்றனர். அதாவது ஆண்டவருடைய கைகளை முறுக்கி நமது ஜெபத்திற்கு பதில் கொடுக்கச் சொல்லி கட்டாயப்படுத்துவது. நமது ஜெபங்களுக்கு பதில் கிடைக்காத பொழுதோ உடனே நாம் மனமடிவாகிறோம். தேவன் தமது வாக்கினை நிறைவேற்றவில்லையென அவர் மேல் பழி போட்டு உபவாசம் மற்றும் ஜெபத்தின் வல்லமை மீதே நாம் சந்தேகம் கொள்கிறோம். இஸ்ரவேலர் செய்ததுபோல தொடர்ந்து நாம் அவருக்கு எதிராக முறுமுறுத்து நாங்கள் உபவாசம்பண்ணும்போது நீர் நோக்காமலிருக்கிறதென்ன? நாங்கள் எங்கள் ஆத்துமாக்களை ஒடுக்கும்போது நீர் அதை அறியாமலிருக்கிறதென்ன? என்று கேட்கிறோம் (ஏசா 58:3).

ஏசாயா 58வது அதிகாரம் தேவன் விரும்புகிற உபவாசத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறது. பாபிலோனியரால் இஸ்ரவேலர் சிறைபிடிக்கப்படுகிறதற்கு முன்னர் அவர்கள் வருடந்தோறும் நிவாரண நாளை அனுசரித்து வந்தார்கள். யூதர்களின் கால அட்டவணையின்படி, ஏழாம் மாதம் பத்தாம் நாளில் தேச முழுவதிலும் உபவாசத்தில் பங்கெடுத்து வந்தனர். இந்த நாளில்தான் அந்த தேசத்தில் குடியிருந்த இஸ்ரவேலரும் அந்நியரும் தங்கள் வேலைகளை ஒதுக்கி வைத்து தங்களைத் தாங்களே வெறுத்து அனுசரிக்க கடமைப்பட்டிருந்தனர். தங்கள் பாவத்தினின்று அவர்கள் சுத்திகரித்துக் கொள்ளும் நாளாக இருந்தது. ஆனால் அதனை அவர்கள் செய்வதற்கு ஏற்படுத்தின முறைமைதான் தேவனுடைய கோபத்தைக்கிளறியது. எனவே அவர் தமது தீர்க்கதரிசியான ஏசாயாவை அனுப்பி அவர்களை இவ்விதமாகக் கண்டித்தார்.

நாங்கள் உபவாசம்பண்ணும்போது நீா நோக்காமலிருக்கிறதென்ன? நாங்கள் எங்கள் ஆத்துமாக்களை ஒடுக்கும்போது நீா அதை அறியாமலிருக்கிறதென்ன என்கிறார்கள் . இதோ, நீங்கள் உபவாசிக்கும் நாளிலே உங்கள் இச்சையின்படி நடந்து, உங்கள் வேலைகளையெல்லாம் கட்டாயமாய்ச் செய்கிறீர்கள்.

இதோ, வழக்குக்கும் வாதுக்கும் துஷ்டத்தனத்தையுடைய கையினால் குத்துகிறதற்கும் உபவாசிக்கிறீர்கள் . நீங்கள் உங்கள் கூக்குரலை உயரத்திலே கேட்கப்பண்ணும்படியாய், இந்நாளில் உபவாசிக்கிறதுபோல் உபவாசியாதிருங்கள்.

மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும், தலைவணங்கி நாணலைப்போல் இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக்கொள்ளுகிறதும், எனக்குப் பிரியமான உபவாச நாளாயிருக்குமோ? இதையா உபவாசமென்றும் கர்த்தருக்குப் பிரியமான நாளென்றும் சொல்லுவாய்?(ஏசாயா 58:3-5)

உபவாச நாளை அவர்கள் கூறுவித்த விதம், தங்கள் பாவங்களை சுத்திகரித்த முறைமை, பரிசுத்த தேவனுடைய கண்களுக்கு முன்பாக அருவருப்பாயிருந்தது.

நூற்றாண்டுகளாக சபையும் தொடர்ந்து புரிந்து வந்த பாவமாக இது இருக்கிறது. நாம் உபவாசித்து ஜெபிக்கிறோம் ஆனாலும் எளியவர்களை நாம் ஒடுக்கி, கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகளை பகைக்கிறோம். அநேக வேளைகளில் நம்முடைய நோக்கம், தேவன் நம் ஜெபத்திற்கு பதில் கொடுக்கவேண்டும் என்பதாக தான் இருக்கிறதே தவிர நம் வாழ்க்கையில் அவருடைய சித்தம் என்னவென்று கண்டறிந்து அதற்கு இணங்குவது கிடையாது. ஜெபமும் உபவாசமும் நம்முடைய அக்கிரமங்களை அடையாளங்கண்டு மனந்திரும்புதலுக்கு வழிநடத்திச்செல்ல வேண்டும். நாம் உபவாசிக்கும்போது அது நம்மை நாமே சுத்திகரிப்பதற்கு ஏற்ற விதத்தில் இருந்து, மற்றவர்கள் மத்தியில், கிறிஸ்துவின் நன்மையையும் இரக்கத்தையும் வெளியரங்கமாக்க வேண்டும்.

"அநீதியின் கட்டுகளை உடைத்து, ஒடுக்கப்பட்டவர்களை விடுதலையாக்கி, எல்லா சுமைகளையும் உடைத்து, பசியுற்றவர்களுக்கு ஆகாரம் பகிர்ந்து கொடுத்து, பரதேசிகளுக்கு அடைக்கலம் தந்து, நமது இரத்தத்திற்கும் சதைக்கும் எதிராக திரும்பாமலிருக்க வேண்டும்." சுருங்கச் சொல்லப்போனால் உபவாசம் என்பது, ஒரு வேளை உணவை ஒதுக்கி

வைப்பதோ அல்லது இத்தனை நாள்களுக்கு நன்மை செய்வதோ அல்லது விரும்பினவைகளை வெறுத்து தியாகம் செய்வதோ அல்ல.

நமது ஜீவியம், ஜெப வாழ்க்கை, தேவ சித்தத்திற்கு ஏற்ற விதமாய் இருப்பதை உறுதி செய்து தேவனுடனும் மற்றவர்களுடனும் நாம் சரியாக இருப்பதே முக்கியமான காரியமாகும். அப்பொழுது பயனுள்ள விதத்தில் பூமியில் அவருடைய நோக்கத்தை நாம் நிறைவேற்ற இயலும்.

தரும காணிக்கை: நாடளவில் அனுசரிக்கும் இந்த உபவாச காலத்தில் ஒருவேளை உணவைத் தவிர்த்து, சேமித்த அந்தப் பணத்தை எமது தரும காணிக்கை சேகரிப்புக்கு அனுப்பலாம். என்.இ.சி.எஃப் பப்ளிக் பேங்க் எண்: 3078972807. தனிப்பட்ட அல்லது சபையாக அனுப்பப்படும் இப்பணம் கீழ்க்காணும் ஊழியத்திற்கு பயன்படும்.

1. கிழக்குப்பகுதி சபைகள் மற்றும் பணிகளுக்கு
2. கிராமப்புற கல்வி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு
3. ஓய்வுநாள் தலைமத்துவ மேம்பாட்டு பயிற்சிகளுக்கு மற்றும்
4. சீஷராக ஆகும் பயிற்சித்திட்டத்திற்கு

உங்கள் வங்கி படிவத்தை நகல் எடுத்து எங்களுக்கு அனுப்பவும் (ஃபேக்ஸ் எண் 03-7729 1139) அல்லது ஈமெயில் (prayer@necf.org.my).

40 நாள்கள் உபவாச ஜெபத்தில் சேகரித்த தர்ம காணிக்கைகென ஒதுக்கின தொகை என குறிப்பிடவும்.

# ஜெபத்தைப் பற்றி நாம் புரிந்து கொண்டதை மீள்பார்வை செய்தல்



தேசத்திற்காக மன்றாடத்துவங்கும் இந்த 40 நாள்கள் உபவாச ஜெபத்தில் ஆண்டவரிடம் கேட்டுப்பெற்றுக்கொள்ளும் நிலையில் மாத்திரம் அல்லாமல் நமது அன்பு ஆண்டவரிடம் ஒரு சம்பாஷனை போன்ற உறவு முறை அடிப்படையில், ஜெபிக்க முனைவோமாக. இப்படியாக ஆரம்பிப்போமாக. தேவன் நல்லவர். அளவற்ற அன்பில் நம்மை சூழ்ந்து கொள்கிறார். அவருடைய கிருபை என்றுமுள்ளது. நாம் அவரை நம்பியிருக்க முடியும். இவற்றை அறிந்திருக்கிற நாம் 1 தெச 5:16:18ஐ நம் வாழ்வில் பயன்படுத்த முடியும். எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

இயேசு கிறிஸ்துவில் நாம் ஜெயத்துடனும் அர்த்தத்துடனும் ஜீவிக்கும் பொருட்டு, நாம் தேவனை நன்கு அறிந்து புரிந்துகொள்ள வேண்டுமென அவர் விரும்புகிறார். (எரேமியா 9:23-24 வாசிக்கவும்). இந்த மனப்பாங்கோடு நாம் அவரை அணுகினால், ஜெபமானது கடமைக்கென செய்வதாக அல்லாமல் அவருடன் இணைகிற ஒரு மகிழ்ச்சியுள்ள நேரத்திற்கு காத்திருந்து அனுபவிப்பதற்கு ஒப்பானதாகும். ஏனெனில் அங்கேதான் நம்மை பிரமிக்கும் வெளிப்படுத்துதல், அற்புதங்கள் மற்றும் மேற்கொள்ளும் அனுபவங்களை பெறுவோம். தேவனுடைய உண்மைத்துவத்திலும் அன்பின் கிருபையிலும் அஸ்திபாரப்படுவோமாகில் அவருக்குள் அசைக்கப்படாத விசுவாசத்தில் நிலைத்திருப்போம். ஜெபத்தைக்குறித்த உன் எண்ணங்களில் ஒரு மாற்றம் வேண்டும் என விரும்புகிறாயோ?

ஜெபி:

**தேசத்தில் தாக்கத்தை உண்டுபண்ணுகிற 7 தூண்கள் : வியாபாரம்**

- **நேர்மையுள்ள வியாபாரிகள் எழும்ப ஜெபி.** சபையானது நல்ல ஒத்துழைப்பு மற்றும் செழிப்பாய் வளரச்செய்வதற்கு ஏற்ற சந்தை இடமாக விளங்க. இராஜ்ஜிய சிந்தையுள்ள கிறிஸ்தவ ஆண் பெண் வியாபாரிகள் மன்றாட்டு ரீதியில் ஜீவனம் நடத்த.
- **மலேசியாவில் பொருளாதார மந்த நிலை முறியடிக்கப்பட ஜெபி.** தேவன் இடைபட்டு அவருடைய மகத்துவமுள்ள கரம் தேசத்தை வீழ்ச்சியடையச்செய்கிற ஊழல் அமலாக்கத்தை களையெடுக்க ஜெபி. நல்ல பழக்க புழக்கங்கள் உறுதிபடுத்தப்படட்டும். பெருமளவில் முதலீடுகளும், பொருளாதார வளர்ச்சியும் அடைய ஜெபி.

## எப்படி நாம் ஜெபிக்க வேண்டும்? -பாகம் 1

தேவன், அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு என்ன சொல்ல விரும்புகிறார் என்பதைக் கண்டறிய, பக்கம் பக்கமாக வேதாகமம் முழுவதும் வாசிக்கப்பட வேண்டும். தேவன் நமக்கு அருளினவற்றை சரியான உக்கிராணத்துவப் பொறுப்புடன் நடத்த நம் கண்களைத்திறந்து, நல்ல புரிந்துணர்வைத்தரும்படி கேட்கவேண்டும்.

அநேக வேளைகளில் நாம் நம்முடைய மன்றாட்டுகளையும் பிரச்சினைகளையும் அவரிடம் சொல்லி எப்படியாது சீக்கிரத்தில் பதில் கிடைக்கப்பெற கெஞ்சுகிறோம். ஜெபம் என்பது ஒரு இருவழி உரையாடல். அதை விடுத்து ஒருவரே பேசிக்கொண்டிருப்பது அல்ல.

தேவனிடமிருந்து எப்படி செவிமடுப்பது? அது ஒரு வாஞ்சையோடு துவங்கும். தேவனை அறிவதும் தேவனால் அறிந்து கொள்ளப்படுவதுமாகும். "என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கும். நான் அவைகளை அறிந்திருக்கிறேன், எனவே என்னை பின்பற்றும்" என யோவான் 10ல் இயேசு கூறுகிறார். யோவான் 5:39லும் பரிசேயரை நோக்கி அவர்,

வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே.

வேதத்தின் பெரும்பகுதியை வாசிப்பதற்கு, அநேகர் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். ஆனால் இந்த 40 நாள்களில் நாம் ஓர் ஒழுங்குடன் ஒரு நாளைக்கு 10 அதிகாரம் வாசித்து நம் உள்ளான மனிதனை திருப்தியுடன் நிறைவு படுத்த முடியும். (புதிய ஏற்பாடும் சங்கீதமும் வாசித்து முடிக்க இயலும்)

தேவனுடைய வார்த்தைகளை நாம் நம்மில் கறையச்செய்து, அவருடைய வசனங்கள் நமது சிந்தையை புதிப்பிக்கக்க அனுமதித்தோமானால், அதின் விளைவு பெரும் ஆச்சரியத்தைக் கொண்டு வரும். என் ஆவிக்குரிய மனுஷன் திருப்திபடுத்தப்பட்டானா அல்லது இன்னும் பசியோடு காணப்படுகிறானா என்பதை நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

ஜெபி:

**தேசத்தில் தாக்கத்தை உண்டுபண்ணுகிற 7 தூண்கள் : செய்தி ஊடகங்கள்**

**துணிவிற்காக ஜெபி:** என்ன விலையானாலும் உணர்த்துதலுடன் உண்மையைபேசவும், பத்திரிகை தர்மத்துடன் செய்தியாளர்கள் பணிபுரியவும்

**ஞானத்திற்காக ஜெபி:** செய்தி ஆசிரியர்கள், தயாரிப்பாளர்கள் - உண்மைக்கும் பொய்க்குமான வேறுபாட்டை நிதானித்து, பொறுப்புடனும் நேர்மையுடனும் தங்கள் கருத்துகளை பரிமாற்றம் செய்ய ஜெபி.

**பாதுகாப்பிற்காக ஜெபி:** தனியார் செய்தி ஊடகங்கள் உண்மை செய்தியினை தேடி வெளியிடவும், அவர்களுக்கான நிதி, தாலந்து இவற்றை தேவன் அருளவும் ஜெபி.

**கிறிஸ்தவ பத்திரிகை செய்தியாளர்களுக்காக ஜெபி:** நற்செய்தியின் வாசனையைத் தொலைத்தவர்கள் தேவனுடன் புதிய ஒரு தொடுதலையும், தங்களுக்கென ஒரு பெயர் உண்டாக்கிக்கொள்ளாமல்,தேவ இராஜ்ஜியத்தைக்கட்டும் பணிதனை புரிய ஜெபி.

## எப்படி நாம் ஜெபிக்க வேண்டும்? -பாகம் 2



தேவ பரிசுத்தத்திற்கு ஆராதனையானது தொடர்பு ஏற்படுத்துகிறது. ஆராதனையில், தாவீது இராஜா இவ்விதமாக கூறுகிறார். நாடோறும் உம்மை ஸ்தோத்திரித்து, எப்பொழுதும் என்றென்றைக்கும் உம்முடைய நாமத்தைத் துதிப்பேன். கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார் . அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது.(சங்கீதம் 145 :2-3).

இதற்கு முன்பதாக, வேத வாசிப்பின் மூலம், தேவனை அறிந்து, நமது சிந்தைகளையும் அவருடனான உறவையும் ஆழப்படுத்தலாம் என்பதை கலந்து பேசினோம். அவருடைய பிரசன்னத்தில் அவரைக்குறித்த நமது அறிவு இன்னும் மேன்மையடையும் பொழுது, தாவீது எப்பொழுதும் செய்வதுபோல நாமும் தானாகவே நமது இராஜாதி இராஜனை கனப்படுத்தி, ஆராதனையில் மறுமொழி கொடுக்க வல்லவர்களாகிறோம்.

அவருடைய பிரசன்னத்தில் நாம் முழுமையாக மூழ்கும்பொழுது, அவருடைய அன்பிற்கு நம்மை முழுவதும் அர்ப்பணித்து செயல்படுகிற அனைத்திலும், "என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவர்" என்று சொல்ல ஏவப்படுகிறோம்.

ஜெபி:

### தேசத்தில் தாக்கத்தை உண்டுபண்ணுகிற 7 தூண்கள்: கலைகளும் கேளிக்கைகளும்

சாத்ராக், மேஷாக், ஆபெத்நெகோ போன்றவர்களுக்காக ஜெபி: நிறுவனங்களில் பணிபுரிகிறவர்கள், பலமும் துணிவும் மிக்கவர்களாய், கலாச்சார கேடுகளுக்கு சாயாமல், தேவ சத்தியத்திற்கு நின்று, தங்கள் சாட்சியை வெளிப்படுத்த ஜெபி. (தானியேல் 3ஐ வாசி)

**கல்லான இருதயம் சதையானதாக மாற ஜெபி:** நிறுவனங்களில் பணிபுரியும் அநேகர் தங்கள் கண்களை சத்தியத்திலிருந்து எடுத்து விட்டதினால், தேவ வாக்குத்தத்தங்களை விசுவாசியாமல் இருக்கும் வேளையில் அவர்களின் இருதயம் இளகிப்போயிற்று, அவர் பக்கமாய் மறுபடியும் திரும்ப ஜெபி

**தைரியமுள்ள இருதயங்கள் பெரியதாய் கனவு காண ஜெபி:** என்ன விலையானாலும், தங்கள் கனவு எவ்வளவு கடினமானதாக இருப்பினும், தேவன் தங்கள் ஜீவியத்தில் நியமித்திருக்கும் இலக்கைத் தொடரும் துணிவு பெற ஜெபி. தேவ மகிமைக்கென சரியான விதத்தில் புத்தாக்க சிந்தையுடன் செயல்பட ஜெபி

**ஞானமும் பகுத்தறியும் விவேகமும் பெற ஜெபி** : பயனீட்டாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இருசாராரும் கலை மற்றும் கேளிக்கைகளை நிதானிக்க ஜெபி. உண்மை எது பொய் எது என பிரித்தெடுக்கும் பகுத்தறிவிற்காக ஜெபி.

நாள் 4

ஆகஸ்ட் 10

## எப்படி நாம் ஜெபிக்க வேண்டும்? -பாகம் 3



நமது ஜெபத்திற்கு உபவாசமானது ஒரு சிறந்த உடன் சாதனமாகும். பவுல் கொரிந்து சபைக்கும், தான் பயிற்றுவித்த தீமோத்தேயுவுக்கும் எழுதும்பொழுது, ஒரு ஓட்டப்பந்தய வீரன் அல்லது இராணுவ வீரன் எவ்விதம் தன் சரீரத்தை ஒடுக்கி, தன் நோக்கத்தில் கருத்துடன் இருக்க வேண்டும் எனும் அவசியத்தை விளக்குகிறான்.

அதே வண்ணம் உபவாசமானது சில உணவு வேளையை தவிர்ப்பதும், நம் சிந்தையை அனுதினமும் திசை திருப்புவதிலிருந்தும், தவிர்க்கச்செய்யும் ஓர் ஒழுங்கும் அர்ப்பணமுமாகும். அப்பொழுது நமது புலன்கள் தேவ சத்தத்திற்கும், பிரசன்னத்திற்கும் வழிகாட்டுதலுக்கும் கூர்மையாகி தீவிரப்படும்.

அவருடன் நாம் நெருங்கும்பொழுது தேவன் தம்மைக்குறித்தும், தம் திட்டத்தைக்குறித்தும், எவ்வளவாய் நம்மோடு ஐக்கியம் கொள்ளத் தவிக்கிறார் என்பதை நமக்கு வெளிப்படுத்துவதைக் கண்டு நாம் ஆச்சரியப்படுவோம். **இந்த ஜெப காலத்தில் என்னத்திற்கு உபவாசிக்க வேண்டும்?**

**ஜெபி:**

**தேசத்தில் தாக்கத்தை உண்டுபண்ணுகிற 7 தூண்கள் : கல்வி**

கல்விக்கொள்கையை தயாரிப்பவர்களும் கல்விமான்களும்: கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் உள்ள மாணவர்களிடையே உள்ள கல்வி வேறுபாட்டை களைய ஞானமும் உணர்த்துதலும் இருக்க ஜெபி. தற்போதைய திட்டத்தில் கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு, போதிய அளவு வெளி அனுபவமும், வாய்ப்புகளும் சற்று குறைவுதான். மாணவர்கள் புத்தாக்கத்துடனும் உருவாக்கத்துடனும் சிந்திக்கும் வகையில் கல்விக் கொள்கைகள் இருக்க ஜெபி. கல்விமான்களுக்கு பற்றுதலும் தாலந்துகளும் இருக்க ஜெபி

கிறிஸ்தவ ஐக்கியக்குழுக்களுக்காக ஜெபி: ஆண்டவர்தாமே ஆசிரியர்களையும், மாணவர்களையும் தங்கள் மந்தைகளையும், இளம் கிறிஸ்தவர்களையும், வலுவான கிறிஸ்தவ அஸ்திபாரங்களில் கட்டி, ஆசீர்வதிக்கும் படிக்கும், ஊட்டமளித்தலுக்கும் கொண்டு வந்து, அவர்களை பாதுகாக்க ஜெபி.

## எப்படி நாம் ஜெபிக்க வேண்டும்? -பாகம் 4



சக விசுவாசிகளோடு ஏக சிந்தையாய், குழுவாக ஜெபிப்பது நல்லது. ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, நற்கிரியைகளை செய்யவும் சபை கூடி வருதலை உற்சாகப்படுத்தியும் வருவதும் சிறந்தது என எபிரெயர் 10ல் சொல்லப்படுகிறது. இந்த 40 நாள்கள் உபவாச ஜெபம் நிச்சயமாகவே சவால் நிறைந்ததும், குழுவில் ஒரு துணையாளரை கூடச் சேர்த்து ஜெபிப்பதும் நம் அனுபவத்தை இன்னும் உற்சாகப்படுத்தும்.

இந்த 40 நாள்கள் தேடுதலுக்கு பதில் கண்டுபிடிப்பதும், ஒருவருக்கொருவர் சாட்சி மற்றும் வெளிப்பாடுகளைப் பகர்ந்து, ஓர் இரும்பு மற்ற இரும்பை தீட்டுவதுபோல ஒருவர் மற்றொருவரைத் தூண்டுவதுமாக இருக்க வேண்டும்.

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.(ஏசாயா 40:31)

இந்த ஜெப காலம் முழுவதும், பரிசுத்த ஆவியானவர் என்ன சொல்ல வருகிறார் என்பதை, பதிவேட்டில் குறித்துக்கொள்ளுங்கள். உங்கள் சபைக்குழுவினரோடு இணைந்து, மலேசியாவுக்காக ஜெபிக்க பாரப்படும் விசுவாசிகளை சேர்ந்துகொள்ள உற்சாகமளியுங்கள். நமது தேசத்தில் வரக்கூடிய மாற்றங்களின் மத்தியிலும் நமது நம்பிக்கையை விடாது பிடித்து, தொடர்ந்து முன்னேறிச்செல். ஏனெனில் இது நம் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவையும் அவருடைய பரிபூரண திட்டத்தின் ஒரு பகுதியும் ஆகும்.

**ஜெபி:**

**தேசத்தில் தாக்கத்தை உண்டுபண்ணுகிற 7 தூண்கள் : குடும்பம்**

**திருமணங்களுக்காக ஜெபி:** வேதாகம அடையாளங்களுக்குத் திரும்பி, கணவனும் மனைவியும் தங்கள் பங்கினை சரிவர அறிந்து செயல்பட ஜெபி. விபச்சாரம், விவாகரத்து, தவறான உறவு முறைகளிலிருந்து விவாகங்கள் காப்பாற்றப்பட ஜெபி.

**பெற்றோர்களுக்கு ஜெபி:** வேதாகமத்தையொட்டிய பெற்றோர்த்துவம் நிலைவரப்பட ஜெபி. இல்லங்களில் ஜெப பீடங்களை ஸ்தாபித்து தேவ பயத்துடன் பிள்ளைகள் வளர்க்கப்படவும் ஜெபி.

**திருமணமாகாத ஒற்றை நபர்கள். ஆண் பெண் எனும் தனிப்பட்டவர்கள்,** வேதாகம அடையாளங்களில் தங்கள் கன்னித்தன்மை பரிசுத்த நோக்கம் கொண்டதாக அமையவும் ஜெபி.

## தேவனுடைய தன்மை



எங்கள் இரட்சிப்பின் தேவனே, நீர் எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும், எங்கள்மேலுள்ள உமது கோபத்தை ஆறப்பண்ணும். என்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிருப்பீரோ? தலைமுறை தலைமுறையாக உமது கோபத்தை நீடித்திருக்கப்பண்ணுவீரோ?

(சங்கீதம் 85:4-5)

குற்றத்திற்கு தகுந்த தண்டனை கிடைக்கும் என பெரும்பாலான மதங்கள் அச்சத்தில் இயங்குகின்றன. நான் இதைச்செய்யவில்லையென்றால் தண்டிக்கப்படுவேனா? நான் செய்த தீங்கான காரியங்கள் என்னை பின்பற்றி வருமா எனும் பயம் காணப்படுகிறது?

எனினும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர் தேவ அன்பினால் இயங்குகிறார்கள். கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது (2 கொரி 5:14). ஆனாலும் அநேக வேளைகளில் நாம் அவருடைய அன்பை எதார்த்தமாய் எண்ணுகிறோம். நம்மைச்சுற்றிலும் காண்போம். தேவனை மறந்த ஓர் உலகிலும், படைத்தவரை கனம்பண்ணாத ஓர் வையகத்திலும் நாம் வாழ்கிறோம்.

நாம் வழுவிச் சென்றாலும் தேவ தன்மை மாறாமல் இருக்கிறது. நாம் விடாப்பிடியாய் நம் பாவத்திலிருந்து மனந்திரும்பாமலும் அவருடைய பாதுகாப்பு எல்லையை சுயேச்சையாக மீறிச் செல்லுகிறதினாலும் தேவ கோபாக்கினையை எதிர்நோக்குகிறோம். கிறிஸ்துவின் மூலமாகத் தான், தகுதியற்ற நாம், அவரின் இரக்கத்தைப்பெற்று, நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றதை அறிகிறோம். நமது தேசத்தின் மீது தேவனுடைய ஷேமம் வரவேண்டி, தொடர்ந்தாற்போல் மன்றாடுகிற நாம், நமது இருதயத்தின் நிலையை உணர்ந்தவர்களாய், அவருக்கு முன்பாக சரி செய்து கொள்ள அவரை நாம் தேட வேண்டும்.

**ஜெபி:**

**தேசத்தில் தாக்கத்தை உண்டுபண்ணுகிற 7 தூண்கள் : சமயம்**
**தேவன் மத வேறுபாடின்றி தீவிரவாதத்திலிருந்தும் மத வாதத்திலிருந்தும் அனைத்து மலேசியரையும் பாதுகாக்க ஜெபி:** தீவிர மார்க்க செயல்பாடுகள் பாதிக்காதபடி, மற்றவர்களை சேதப்படுத்தும் அனைத்து மத செயல்களை பகுத்தறிந்து எதிர்க்க ஜெபி
**மிதவாதம் வெறும் பேச்சளவில் மாத்திரம் இல்லாமல், நமது சமூக அமைப்பில் ஆழப்பதிந்த ஆளுமைக்கு ஏற்றதாகவும் இருக்க ஜெபி.** நாட்டின் சுபீட்சத்திற்கும் நன்மைக்கும், அனைத்து மலேசியர்களும் மத சகிப்புத்தன்மையை பேண ஜெபி.

# தேவனுடைய கோபாக்கினையைத் தூண்டுதல்



ஒரு தேசத்தையே கைவிடும் அளவிற்கு, தேவனைக்கோபப்படுத்துவது என்ன? பழைய ஏற்பாடு மற்றும் சரித்திரம் முழுமையும், தேவன் அவர்களை விட்டுத் திரும்பி, அவர்களின் திட்டங்களுக்கே விட்டு விட்ட மூன்று வித இயல்புகளை நாம் காண்கிறோம். கீழ்ப்படியாமை, நேரடி முரட்டாட்டம், முரண்டுபிடித்தல்.

தேவன் தம் ஜனங்களை பாதுகாப்பதற்கும், அதினால் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு தாங்கள் செய்கிற அனைத்திலும் செழிப்படையும்படிக்கும் பத்து கற்பனைகளைக்கொடுத்தார். தம்மை முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், சிந்தையோடும் அன்பு செலுத்த பிரதான கட்டளையை இயேசு சொல்லியிருந்தார். நமது பரிவும், வாஞ்சையும் அவருக்குச் கொடுக்கப்படாதபோது அது மற்ற ஒருவருக்குச் செல்லுகிறது. நமக்கு நாமே விக்கிரகங்களை ஏற்படுத்திக்கொள்ளும்போது நாம் அவருக்குக் கீழ்ப்படியாமல் போகிறோம்.

தேவன் எவ்வளவுக்கு எவ்வளவு இரக்கமுள்ளவர்களாய் இருக்கிறாரோ அவர் எவ்வளவேனும் பாவத்தை சகிக்க மாட்டார். என் இருதயத்தில் அக்கிரமச்சிந்தைக் கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவி கொடார். (சங்கீதம் 66:18). நமது சமுதாயத்தையும் சந்ததியையும் கூட பாதிக்கச்செய்யும் அளவிற்கு நாம் அறிக்கை செய்யாத பாவங்கள் யாவை? அவற்றிலிருந்து நாம் மனந்திரும்புதற்கு தாமதம் ஒன்றுமில்லை. நாம், இரக்கமுள்ள தேவன் முன்பதாக, தூய்மையாய் வந்து, நமது பாவக்கட்டுகளை உடைத்தெறிவோம்.

**ஜெபி:**

**தேசத்தில் தாக்கத்தை உண்டுபண்ணுகிற 7 தூண்கள் : அரசாங்கம்**

**தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக ஆக்கினைப் பேசாமல், ஜீவனை பேசுவோம் ஆணையர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் ஜெபி.**( எந்த கட்சியைச் சார்ந்தவர்களானாலும் சரி), நீதி தவறாத நியாயத்துடனும், எந்தவொரு அச்சமுமின்றி நல்ல ஆட்சிக்கு சரியான தீர்மானம் எடுக்க.

**அரசு சார்புள்ள அனைத்து நிலைகளிலும் செயல்படுகிற பேராசையின் ஆவிக்கு எதிராக ஜெபி :** புதுப்பிக்கப்பட்ட சிந்தயுள்ளவர்களாய் இருக்க ஜெபி.

**உயிர்ப்பிக்கப்பட்ட அரசு ஊழியர்கள் சந்ததி உருவாகவும், பொறுப்பற்ற தன்மையிலோ பேராசையினாலோ ஆக்கிரமிக்கப்படாமல் தேவ பயம் மற்றும் நீதியை நேசிக்கிறவர்களாய் செயலாற்றவும் ஜெபி :** அரசு ஊழியர்களாய் சேவை செய்ய தெரிந்துகொண்ட அனைத்து தேவ பக்தி கொண்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தேவ ஆசீர்வாதம், தேவ தயவு மற்றும் பலம் பொழிந்தருளப்பட ஜெபி.

# சபையின் இன்றைய நிலை



மனுபுத்திரனே, இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரை . நீ தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவா மேய்ப்பருக்குச் சொல்லுகிறார். தங்களையே மேய்க்கிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ! மேய்ப்பர் அல்லவா மந்தையைமேய்க்கவேண்டும்.

(எசேக்கியேல் 34:2-4)

சபையை ஆட்டிப்படைக்கும் ஒரு சில விவகாரங்கள் எவை?

## பொறுப்பற்ற மேய்ப்பர்கள்

தேவன் தம் ஜனங்களை மிகவும் நேசிக்கிறார், ஆனால் அவர் மந்தைகளை மேய்க்கும்படி அவரால் நியமிக்கப்பட்டவர்கள், தங்கள் பொறுப்புகளைச் செய்யவேண்டிய விதத்தில் செய்யாததினால், மிகவும் துக்கப்படுகிறார். தேவ கோபாக்கினையைத் தூண்டி, தங்களுக்கே நியாயத்தீர்ப்பை குவித்துக்கொள்பவர்கள் யார்?:

- சபைப்பணத்தை தவறாகப்பயன்படுத்துபவர்கள்
- விபச்சாரம் செய்து, தங்கள் மனைவியரையும் பிள்ளைகளையும் துன்புறுத்துபவர்கள்
- சபையாரின் தேவைகளைப் புறக்கணித்து, அவர்கள் வாழ்க்கையின் காயங்களை அலட்சியம் செய்து, அவசியப்படும் இடத்தில் கண்டிப்பதில் தவறினவர்களாய், தேவ சத்தியத்தில் தங்கள் மந்தைகளை போஷியாமல் மக்கள் கேட்க விரும்புவதையே பிரசங்கிப்பவர்கள்.
- தொலைந்து போனவர்களைக் கண்டிபிடிக்காமல், தங்கள் இராஜ்ஜியத்தைக் கட்டிக்கொள்ள விரும்புபவர்கள்.

## பொறுப்பற்ற மந்தை

மந்தையின் உறுப்பினர்களுக்குக் கூட, தேவனால் நியமிக்கப்பட்ட பொறுப்புகள் உண்டு. அவர்கள் எச்சரிக்கப்படுவதின் காரியங்கள் எவை?:

- பிரிவினைகள் மற்றும், சண்டைகளை சபைக்குள் கொண்டுவருவது, புதிய விசுவாசிகள் மத்தியில் நமது தன்மைகளை புகுத்தி இடறல் உண்டாக்குவது, கீழ்ப்படிதலற்ற ஜீவியத்தை ஜீவிக்கிறதினால் தேவனுடைய பொறுமையை சோதிப்பது.

இன்றைக்கும் நமது சபைகளில் காணப்படும் சில புரைகளை அப்போஸ்தலனாகிய யோவான் வெளிப்படுத்தலிலேயே சொல்லியுள்ளார். எபேசு சபை தேவனுக்குரிய ஆதி அன்பை விட்டது, பெர்கமு மற்றும் தியத்தீரா விக்கிரக ஆராதனை மற்றும் வேசித்தனத்தை சகித்திருந்தது, சர்தை மற்றும் லவோதிக்கேயா, அனலுமின்றி குளிருமின்றி காணப்பட்டது.

(வெளி 2-4)

நமக்கும் நம் சபைக்கும் சார்பாக நாம் எதில் மனந்திரும்ப வேண்டியது அவசியமாயிருக்கிறது?

ஜெபி:

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : பினாங்கு**

**பினாங்கு சபைகளுக்காக ஜெபி:** தேசத்தின் அனைத்து ஜெப இல்லங்களுக்கும், மன்றாட்டின் புதிய தீயை எரியூட்டித் துவங்கவும், பேலியாளின் ஆராதனைக்கு வேராகத் திகழ்கிற இந்த மாநிலத்தில், இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி பூமியின் கடையாந்திரம் மட்டும் எட்டும்படி, தேவனுடைய வல்லமைக்கும் எழுப்புதலுக்கும் ஜெபி

**வரம்பற்ற நில ஆக்கிரமிப்பிற்கு எதிராக ஜெபி:** ஸ்தல மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களால், அதிகரித்து வரும் மேம்பாட்டுத்திட்டங்களுக்கு பெருமளவு நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. அதின் விளைவாக சந்ததி சந்ததியாக வாழ்ந்து வந்த தங்கள் சொந்த நிலத்திலிருந்து மக்கள் வெளியேற்றப்படுகின்றனர். அவர்கள் குரல் கேட்கப்படவும், மாநில அதிகாரிகள் அவர்களின் கோரிக்கையை ஞானத்துடனும், நேர்மையுடனும், கரிசனையுடனும் கையாள ஜெபி.

**விபச்சாரத்திற்கு எதிராக ஜெபி:** குறைந்த விலை தங்குமிடம், மசாஜ் மையம், இரவு கேளிக்கை எனும் போர்வைக்குள் அநேக பொறுப்பற்றவர்கள் சிற்றின்ப தொழிலை செய்து வருகின்றனர். ஓரின சேர்க்கை சேவைக்கும் பினாங்கு பேர் பெற்று விளங்குகிறது. நீதியை பெய்யப்பண்ணவும், விபச்சார விடுதிகளை அதிகாரிகள் துடைதொழிக்கவும், பாலுணர்வு வாணிபத்தில் சிக்கியிருப்பவர்கள் விடுதலையடையவும் ஜெபி.

## அவருடைய சந்திக்குங்காலத்தை நழுவவிடுதல்



அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப்பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுது, உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது.

உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி,

உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார். (லூக்கா 19:41-44).

இந்தப்பகுதியில் இயேசு கண்ணீர் விட்டார் என வாசிக்கிறோம். கவனியுங்கள். மனிதன் கண்ணீர் விடாதவற்றிற்காக இயேசு கண்ணீர் விட்டார். அவர் எருசலேமுக்காக கண்ணீர் விட்டார். ஏன்? ஏனெனில் ஜனங்கள் அந்த காலகட்டத்தை நழுவ விட்டனர். அவருடைய வருகையை நழுவ விட்டனர். அதுதான் -யேசுவை கண்ணீர் விடச்செய்தது. நழுவவிடுவதென்பது, பயங்கரமான நாள் தொடரும் என்று அர்த்தம். எருசலேமுக்கு என்ன நிகழப்போகிறது என்பதை இயேசு அறிந்திருந்தார். கி.பி.70ல் அதின் அழிவு, பிறகு நச்சுவாயுவினால் அழிவு, தேசமாக மறுபடியும் எழும்புதல், இஸ்ரவேல் இன்றைக்கு மற்றவர்களால் பகைக்கப்படுதல் போன்றவை. தேசங்களுக்கு என்ன நிகழப்போகிறது என இயேசு அறிந்திருந்தார். மலேசியாவில் அவர் சந்திப்பை நாம் நழுவவிடக்கூடும். இந்த நாளில் நாம் நழுவவிட்டால், வருகிற நாட்களில் நாம் பயங்கரமான காரியங்களை எதிர்கொள்ள நேரிடும்.

இயேசு மனிதனாக வந்தார். அவரைத்தொடவும் காணவும் முடிந்தது. எனினும் அவர் சந்திக்கபடும் வருங்காலத்தை அறியாமலிருந்தனர். அவர் என்ன செய்துகொண்டிருந்தார் எனக் காண்பதில் அவர்கள் தோல்வி கண்டனர். இன்றைக்கும், ஊழியம் செய்வதில் அதிக தீவிரம் கொண்டிருந்தும் சபையானது அவரை நழுவவிடக்கூடுமோ? நாமும்கூட நமது சந்திப்பு நாளை நழுவவிடுவோமோ? வானங்கள் நகருகின்றன. அதனை நழுவவிட்டால், பயங்கர நாள்கள் வரும். எதிர்வரும் பயங்கர நாள்களை தவிர்க்க, சீக்கிரமாய் மறுமொழி தருவோம்.

எண்ணாகமம் 14ல், எப்படி தேவ பிள்ளைகள், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அடைந்தும், -ராட்சதர்களுக்கு பயந்து, அதற்குள் நுழையாமல் போனார்கள்? அவர்களின் சந்திப்பு நாளை அவர்கள் நழுவவிட்டதினால், 40 வருட காலம் வனாந்தரத்தில் திரிந்தனர். இருவரைத் தவிர மற்ற எவரும் அதில் நுழையவில்லை. தேவன் பல பெரிய காரியங்களைச் செய்தும், அவரை அவர்கள் இன்னும் நம்பாமற்போனார்கள். இது தேவனைக் கோபப்படுத்தியது. தேவன் பருவங்களில் கிரியை

செய்கிறார். அதை நழுவ விட்டால், தீங்கான காலங்கள் தொடரும். இந்த காரியம் மலேசியாவில் நிகழாமல் இருப்பதற்கு, நம் தேசத்தில் அவரின் சந்திக்குங்காலம் வரும்போது அதனை நழுவ விடாதே. அவரை சந்திக்கும் வேளையில் உன் வாழ்க்கையில் நீ சரி செய்ய வேண்டியவை என்ன? அவருடைய சந்திப்பை எதிர்கொள்ளும் படிக்கு, நமது தேசத்தின் ஜெப பீடம் எரிந்து கொண்டிருக்குமா?

**ஜெபர்:**

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : ஜோகூர்**
**ஜோகூர் சுல்தான் மற்றும் அவர் குடும்பத்திற்காக ஜெபி:**
இம்மாநிலத்தை ஒரு வாணிப மையமாக உருமாற்றுவதற்கு சுல்தான் கனவு கொண்டுள்ளார். இதனை அடைவதற்கு, சில திட்டங்கள் வரையப்பட்டுள்ளன. இந்த மாநிலத்தின் செழிப்பு, நியாயத்திலும், நேர்மையில் கட்டப்பட ஜெபி.

**குடும்பங்களுக்காக ஜெபி:** குறிப்பிட்ட ஜனங்கள், தங்கள் வளரும் பிள்ளைகளை உறவினர் மற்றும் பராமரிப்பவர்களிடம் விட்டுவிட்டு, சம்பாதிக்க சிங்கப்புர் செல்கின்றனர். இது குடும்பத்தில் பல்வேறு எதிர்மறை சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. தேவ ஞானமும், ஆலோசனையும், சமூகம் பெற்று, இவர்கள் பெற்றோர்களை பராமரித்து, ஆரோக்கியமான தீர்மானங்களை தங்கள் குடும்பங்களுக்கு எடுக்க ஜெபி

**சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்கும் ஜெபி.** குற்றச்செயல்கள் ஜோகூர் மாநிலத்தில் இன்னும் மேலோங்கி நிற்கிறது. சூதாட்ட பழக்கம், போதைப்பித்து, ஜீவனச்செலவு அதிகரிப்பு, இவை யாவும் உடைந்த குடும்பங்கள் உருவாக காரணமாகின்றன. சமூகங்கள் மத்தியில் இந்த அழிவு சக்கரத்தை பரிசுத்த ஆவியானவரே உடைத்தெறிய வேண்டுமென ஜெபி.

# தேவனுடைய கோபாக்கினைக்குத் தப்பித்துக்கொள்ளுதல்



நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்.(எசேக்கியேல் 22:30 - சங்கீதம் 85:2-3)

திறப்பின் வாசலில் நிற்கும்படி தேவன் நம்மை அழைக்கிறார். கேள்வி என்னவென்றால், ஏன் ஒரு சிலரே நிற்க முன்வருகிறார்கள்? ஒரு நபரையும் காணாதபோது, தேவனுடைய கோபாக்கினை ஊற்றப்படுகிறது. ஏன்?

நம்முடைய சொந்த நிரலைவிட, தேவன் தம்முடைய தேசத்தின் மீது அதிக கரிசனை உடையவராய் இருக்கிறார். ஏனெனில் தேசம் காணப்படும் நிலை, அதின் மேல் ஏற்படும் விளைவுகள், ஜனங்களை பாதிக்கும்-உன்னையும் சேர்த்து.

திறப்பின் வாசலில் நிற்பதற்கு, சுவர் கட்டுவதும், பாலம் இணைப்பதுமான அம்சங்கள் அவசியம். பெட்ரோனாஸ் இரட்டை கோபுரம் போல, ஒரு முனையிலிருந்து மற்றொரு முனை இணைக்கப்படவேண்டும். வானத்திற்கும், பூமிக்கும், தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள திறப்பை இணைக்க வேண்டும். அந்த இணைப்பு என்ன?

மனந்திரும்புதலே அந்த இணைப்பு

லேவி 26:40-42 சொல்லுகிறது அவர்கள் எனக்கு விரோதமாகத் துரோகம்பண்ணி நடப்பித்த தங்கள் அக்கிரமத்தையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும் அறிக்கையிடுவதுமன்றி, அவர்கள் எனக்கு எதிர்த்து நடந்தபடியினால், நானும் அவர்களுக்கு எதிர்த்து நடந்து, அவர்களுடைய சத்துருக்களின் தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய்விட்டதையும் அறிக்கையிட்டு, விருத்தசேதனமில்லாத தங்கள் இருதயத்தைத் தாழ்த்தி, தங்கள் அக்கிரமத்துக்குக் கிடைத்த தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொண்டால், நான் யாக்கோபோடே பண்ணின என் உடன்படிக்கையையும்,ஈசாக்கோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஆபிரகாமோடே பண்ணின என் உடன்படிக்கையையும் நினைப்பேன்- தேசத்தையும் நினைப்பேன்.

அவர்கள் எனக்கு விரோதமாகத் துரோகம்பண்ணி நடப்பித்த தங்கள் அக்கிரமத்தையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும் அறிக்கையிட்டால்அப்பொழுது நான்

உடன்படிக்கையையும் தேசத்தையும் நினைப்பேன். நாம் கடந்த கால பாவங்களினின்றும், தற்கால சந்ததி, குறிப்பாக தலைவர்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்பினால் நாம் தேசத்தை மறுபடியும் தேவனோடு இணைப்போம். 1 யோவான் 1:9 மேலும் சொல்லுகிறது, நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவா உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

பால இணைப்பை ஏற்படுத்தினபின்பு, நீ திறப்பிலே நிற்கிறாய். நெகேமியாவைப்போல திறப்பிலே நிற்க, தேவன் மனிதனைத் தேடுகிறார். சுழ்நிலைகளை மற்றவர்களிடம் அறிவித்து, அவர்களும் மன்றாடுவதும் இதில் அடங்கும். மக்கள் அவனிடம் என்ன நடக்கிறது என அறிவிக்கிறவரை, நெகேமியாவும் சொகுசான ஜீவியத்தில்தான் இருந்தான். அவன் தேசத்தை ஆராய்ந்து, அதை ஜனங்களிடம் அறிவித்தான். நாமும்கூட என்ன நடக்கிறது என ஜனங்களுக்கு நினைவுபடுத்த அவர்களுக்கு விழிப்புணர்வு தர வேண்டும். எண் 16:47-50 வரையிலான பகுதியின் இன்னொரு சம்பவத்தில் எப்படி ஆரோன் தூபகலசத்தில் பலிபீட அக்கினியைப்போட்டு, செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே நின்றான் எனவும், வாதையும் நின்றது என்பதையும் விவரிக்கிறது. இதுதான் திறப்பிலே நிற்பது என்று அர்த்தம்.

வெகுசிலரே இந்த கிரயத்தை செலுத்துகிறார்கள், ஆனால் அது நம்மால் முடியாத காரியம் அல்ல. தேவன் நம்மை ஒவ்வொரு படியாக எடுத்துச்செல்கிறார். ஆனால் முக்கியம் என்னவெனில் அவர் அழைக்கும்பொழுது நாம் பதில்தர வேண்டும். இல்லாவிட்டால் அவர் கடந்து சென்றுவிடுவார்.

ஜெபர்:

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : மலாக்கா**

**மலாக்கா சபைகளுக்காக ஜெபி:** ஒற்றுமைக்குறைவும், சுய திருப்தி நிலையும், இந்த மாநிலத்தில் சபைகள் மத்தியில் காணப்படுகிறதினால் எழுப்புதல் அவசியமான ஒன்றாயிருக்கிறது. இருதயத்தில் எழுப்புதலும், பரிசுத்த ஆவியின் பொழிதலும் இருக்க ஜெபி. யோவேல் 2:28 மலாக்காவில் நிறைவேற ஜெபி. மத வைராக்கிய கோட்டைகள் இந்த மாநிலத்தில் தகர்க்கப்பட ஜெபி.

**மலாக்காவின் இளம் வாலிபர்களுக்காக ஜெபி:** உலக பொருளாசைகளைவிடத் தங்கள் இலட்சியம் மற்றும் இலக்கை அடையும்படி ஜெபி.

**மாநில அதிகாரிகளின் நிலைத்திருக்கும் திட்டங்களும் கொள்கைகளும் மாநகர ஆட்சியினர் தங்கள் மாநிலத்தில் மேம்பாடு கொண்டுவரும்பொருட்டு, அவர்களுக்கு வரும் வாய்ப்புகளுக்காக, தேவனைத் துதிப்போம்.** நீதியும்,ஞானமும், நேர்மையும், விவேகமும் நிறைந்தவர்கள் அதிகாரத்திலே நியமிக்கப்பட ஜெபி.

நாள் 11 | ஆகஸ்ட் 17

## தேவனுடைய இரக்கம்: அவருடைய இரக்கம் என்றென்றும் நிலை நிற்கும்



தேவனுடைய தெய்வீக இரக்கம், ஒரு தற்காலிகமான ஒன்று அல்ல என்றும், அது நித்தியமான தேவனுடையை தன்மை என்றும், நினைவு கூறுவோமானால், அது ஒரு நாள் நின்று போய்விடும் என நாம் பயப்படத்தேவையில்லை. அது அநாதியாய் இருப்பதினால் குறைந்து போவதும் இல்லை. அவருடைய இரக்கம் எல்லை கடந்து, அபரிதமான, பரந்த தன்மையுடைய, தெய்வீக மனதுருக்கத்துடன் கூடியதாக என்றென்றும் நிலை நிற்கக்கூடிய ஒன்று என ஏவ் டோசர் என்பவர் பரிசுத்தவானவரின் அறிவு எனும் தன் புத்தகத்தில், இப்படியாக எழுதுகிறார்

நம் மீது கொண்ட அவருடைய பெரிதான அன்பினால் அவர் இரக்கம் பாராட்டி, மனித ரூபம் எடுத்து நம்மைக் மீட்க வந்தார். அவருடைய இரக்கத்தினால் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து இரட்சிக்கப்பட்டோம். இன்று சில நேரம் எடுத்து, தேவ இரக்கத்தைக்குறித்து வசனங்கள் என்ன சொல்லுகிறது என கவனித்து அந்த இரக்கமுள்ள ஆண்டவருக்கு துதியும் நன்றி செலுத்துவோம்.

வேதவசனம் தியானம்

(1 நாளா 16:34,சங் 89:1,(எண் 14:18,19), புலம்பல் 3:22,தீத்து 3:4-5,(சங் 52:8)

ஜெபி:

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : பேராக்**

**குண்டர் கும்பலுக்கு எதிராக ஜெபி:** மாநிலத்தில் இப்பிரச்சினை சர்வ சாதாரணமாகக் காணப்படுகிறது. மாநிலத்தின் இளைஞர்களை தேவன்தாமே பாதுகாக்க ஜெபி. குண்டர் கும்பல் ஆள் சேர்ப்பு, பள்ளிப் பிள்ளைகளிடத்திலிருந்தே துவங்கி, அவர்கள் வழிப்பறி, போதை பயன்பாடு, கொலை பாதகமும் புரிகின்றனர். ஏழ்மையில் உள்ளவர்களுக்கு, போதுமான உதவிகள் வழங்கப்பட ஜெபி. வறிய நிலையில் உள்ளவர்கள், தங்கள் பிழைப்புக்கென்று, இந்த குண்டர் கும்பலில் ஈடுபடுகிறார்கள்.
**காடுகள் அழிப்புக்கு எதிராக ஜெபி:** சுற்றுச்சுழலை பாதுகாக்க, இன்னும் சிறந்த சட்ட விதிகள் அமலாக்கம் செய்யப்பட ஜெபி. செம்பனைத்தோட்டத்திற்கெனவும், காட்டு வெட்டுமரத்திற்கெனவும் வனங்கள் அழிக்கப்படுகின்றன

## தேவனுடைய இரக்கம்: நேர்படுத்து



சங்கீதம் 85ஐ வாசி: கடுந்துயரத்தின்போது, தேவ ஜனங்கள் செய்கிற கூட்டு ஜெபமாக இது காணப்படுகிறது. அவருடைய இரக்கங்களை புதுப்பிக்கும்படிக்கு ஏறெடுக்கிற ஜெபம். குறிப்பாக இந்த ஜெபம் தேவனைப்பற்றிய நோக்கமும், கடந்த நாள்களில் அவருடைய இரக்கங்களைக் குறித்ததான சேகரிப்பாகவும் இருக்கிறது.

தற்கால பிரச்சினைகள், தேவனிடம் செலுத்த வேண்டிய நோக்கத்தை விட்டு நம்மை சுலபமாக வெளியேற்றுகிறது. நாமும்கூட நமக்கு உதவி கிடைக்கும் என நம்பி நமது கவனத்தை திசை திருப்புகிறோம்.

ஆண்டவரே, நாங்கள் ஜெபிக்கிறோம், ஆனாலும் எங்கள் பிரச்சினைகள் எங்கள் சிந்தையை தாறுமாறாக்குகிறது. உம்மில் மறுபடியும் நோக்கமாயிருக்க உதவி செய்யும். (சங்கீதம் 27:4).

கடந்த காலங்களில் தேவ இரக்கம் நம்மை விடுவித்ததை நாம் நினைவு கூறுவதினால், நம் பிரச்சினைகள் மத்தியில் அவருடைய ஈடுபாடு இருக்க அது உதவி செய்கிறது. நாம் தேவனுடைய நன்மையில், தயவில், அன்பில் நோக்கமாயிருக்கும்போது, தொல்லைகள் மத்தியிலும் நாம் களிகூறமுடியும், ஏனெனில் நமது சர்வ வல்ல ஆண்டவர், அவருடைய ஜனங்களை மீட்டு, நம்மை விடுவிக்கிறார்.

அவருக்கு முன்பாக நாம் நம்பிக்கையுடன் வருவோம், ஏனெனில் கிறிஸ்துவுக்குள் நாம் யார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். நாம் தேவனுடைய பிள்ளைகள், அவரால் மீட்கப்பட்டவர்கள்.

ஜெபி:

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : கெடா**

**கெடாவில் உள்ள இளைஞர்களுக்காக ஜெபி.** பொருட்சேதம் விளைவிப்பது, வரம்பற்ற பாலுணர்வு நடவடிக்கைகள், குண்டர் கும்பல் நடவடிக்கைகள் - இவை கெடா இளைஞர்கள் மத்தியில் தொடர்ச்சியாய் காணப்படுபவை. மேலும் ஆரம்பப்பள்ளிப்பிள்ளைகள் மத்தியில், இது தலைவிரித்தாடுவது மேலும் கவலையளிக்கக்கூடியதாக இருக்கிறது. தேவன் தாமே இந்த இளைஞர்களை பாதுகாக்கவும், சுகமும், மறுசீர் செய்யும் நடவைக்கைகள் மேம்படுத்தப்படவும் ஜெபி.

**குடும்பங்களுக்காக ஜெபி:** கோத்தா ஸ்டார், சிக், குவால மூடா, குபாங் பாசு ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் இன்னும் வறுமையில் வாழுகிறார்கள். வேலை வாய்ப்புகள் இவர்களுக்கு ஏற்படுத்தப்படவும், மாநில உதவிகள் சம அளவில் வழங்கப்படவும் ஜெபி.

**மலேசியா-தாய்லாந்து எல்லை பாதுகாப்புக்காக ஜெபி:** எல்லைப்பகுதிகளில் பாதுகாப்பு அலட்சியமாய் காக்கப்படுகிறது. பொருள் கடத்தல், ஆயுதங்கள் மற்றும் கள்ளக்குடியேறிகள் பரவலாக நடக்கின்றன. நேர்மையுடன் நடக்கும் அதிகாரிகள் காவல் பணியில் ஈடுபட்டு, மாநில மற்றும் தேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஜெபி.

## தேவனுடைய இரக்கத்தை நாடுகிறவர்கள்



தேவனுக்கு முன்பாக, நியாயப்படுத்தும் செயல்களில், இருவர் ஈடுபட்டதை உவமையின் மூலம் லூக்கா 18 விவரிக்கின்றது. பரிசேயன் தன் சாதனைகளை பெருமைபடுத்தி மத நடவடிக்கைளை பீற்றுகிறான். நேர் மாறாக ஆயக்காரன் தன்னை ஒடுக்கி, தன் பாவங்களை உணர்ந்தவனாய், தூரத்தில் நின்று, பாவியான என் மேல் மனமிரங்கும் எனக்கூறி பாவமன்னிப்பு கேட்கிறான். அந்த மனிதன் கர்த்தர் முன்பதாக நியாயப்படுத்தப்பட்டான் என இயேசு கூறினார்.

வேதப்புத்தகத்தில் தேவனுடைய இரக்கம் என்பது நடைமுறையில் காணப்படும் கருப்பொருளாகும். அநேக சம்பவங்களில், அவருடைய இரக்கத்தினால் ஜனங்கள் சுகம் பெற்று, இரட்சிக்கப்பட்டு, விடுதலையாக்கப்பட்டார்கள். தாவீதின் குமாரனே, என மேல் இரக்கமாயிரும் என ஒரு குருடன் கூவினான்-பார்வை வந்தது பிசாசு பிடித்தவன் ஒருவன் விடுதலையாக்கப்பட்டான், தமஸ்கு போகும் வழியில் -யேசுவால் சந்திக்கப்பட்டு என் மேல் இரக்கம் காட்டப்பட்டது என பவுல் சாட்சி கொடுத்தான் சிலுவையில் -யேசுவை நோக்கி சாகப்போகிறவன் ஒருவன் அவருடைய இராஜ்ஜியத்தில் அவர் வரும்பொழுது நினைவு கூறச்சொன்னான், இயேசுவோடு அவன் பரதீசியில் இருக்கும் நிச்சயத்தை அளித்தார்.

பிரிட்டிஷ் பிரசங்கி சார்ல்ஸ் ஸ்பர்ஜன் தன் புத்தகத்தில் தேவனுடைய இரக்கத்தை பாதுகாக்கும் இரக்கம், மகா இரக்கம், தகுதியற்றவன் பெறும் இரக்கம், இரக்கத்தில் ஐசுவரியம், மாறாத இரக்கம் என பல்வகைப்படுத்தியுள்ளார். அவருடைய மாறாத இரக்கத்தினால் நம்மை மீட்டெடுத்த தேவனை துதிப்போம்.

**ஜெபி:**

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : சிலாங்கூர் மந்திரி பெசாருக்காக ஜெபி:** அவருக்கு ஞானத்தையும் நேர்மையையும் அருளி, ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் துணிவை கொடுக்க ஜெபி. மாநிலத்தின் சொத்துக்களை பாதுகாத்து செழிக்கச்செய்யவும் அதை எப்படிபாதுகாப்பது எனும் வியூகத்தை அவருடைய அதிகாரிகளுக்கு கொடுக்கவும் ஜெபி.

**மோசமாகும் குற்ற விகிதம்:** தேவன் இடைபட்டு, தேவையுள்ளவர்களுக்கு போஷிக்க ஜெபி. வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கவும், தவிப்பவர்களுக்கு உதவி கிட்டும்படிச்செய்யவும் ஜெபி. குடும்பங்கள் குண்டர் கும்பல், போதை பயன்பாடு, சுதாட்டங்களின் தந்திரங்களில் விழாமல் காத்துக்கொள்ள ஜெபி.

**செல்வச்செழிப்பு நிறைந்த மாநிலத்தின் பகுதிகளில் உள்ள திருச்சபைகள்,** வெளியரங்கமாய் தங்கள் செல்வங்களை தங்களுக்கென திரட்டி வைக்காமல், தேவையுள்ள தங்கள் சகோதர சகோதரிகள் மத்தியில் பகிர்ந்தளிக்க ஜெபி.

## தேவனுடைய இரக்கம்: ஜெப ஸ்தானத்தில் நிறுத்தப்பட



எங்கள் இரட்சிப்பின் தேவனே, நீர் எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும், எங்கள்மேலுள்ள உமது கோபத்தை ஆறப்பண்ணும்.சங் 85:4

நமது தேசம் குணமாக்கப்படவேண்டிய அவசர அவசியத்தில் உள்ளது. ஆனால் எழுப்புதலுக்கு முன்பாக, சபையாகிய நாம், அவருக்கும் முன்பாக வருவதற்கு சரியான ஸ்தானத்தில் நிற்க வேண்டும்.

ஓ கர்த்தாவே, கிறிஸ்துவுக்குள் நாங்கள் உடைக்கப்பட நொறுக்கப்பட வேண்டும்.

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி...தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால்... (2 நாளா 7:14). நமது தேசத்தை அவர் ஷேமமாக்க, நாம் அவர் முகத்தை தேடுவதற்கு முன்பாக, நமது தப்பிதங்களை அறிக்கை செய்து, அவருக்கு முன்பாக சுத்தமாக வரவேண்டும். நமது பரிசுத்த தேவனுக்கு முன்பாக நாம் யார் என்பதை நாம் உணர்ந்துகொண்டால், ஊக்கமாக நம்மால் ஜெபிக்க முடியும்.

ஓ கர்த்தாவே, கிறிஸ்துவுக்குள் எங்களுக்கு சமாதானம் நம்பிக்கை தாரும்

நமது வாழ்க்கையிலும், தேசத்திலும் நாம் அனுபவிக்கும் பிரச்சினைகள், சமாதானத்தை பறித்துகொள்ளும் அளவிற்கு அதிகம். புயலின் மேல் கண்களை வைக்காதே, இயேசு நம்மோடு படகில் இருக்கிறார் அவரே காற்று, புயலின் மேல் அதிகாரம் உள்ளவர்.

ஓ கர்த்தாவே, எங்களுக்குத் தெளிவைத்தாரும்

சிக்கல்கள் நம் சிந்தை மற்றும் ஜெபத்தை குழப்பமடையச்செய்யும். நாம் தெளிவாக சிந்திக்க முடிகிறதா? இன்னும் முக்கியமாக அவருடைய ஆலோசனைகளை நேர்த்தியாய் கேட்க முடிகிறதா? அல்லது பெரும் கூச்சலினாலும் அபிப்பிராயங்களினாலும் திசை திருப்பப்படுகிறோமா? எழுப்புதலுக்கு வேண்டி ஊக்கமான ஜெபம் செய்ய சரியான ஜெப வியூகம் அவசியம் - பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்படுகிற திட்டம்.

ஜெபி:

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : கிளந்தான்**

**கிளந்தான் சபைக்காக ஜெபி:** கிறிஸ்துவின் அன்பும், தயவும், பிரகாசித்து ஒளிவிடும் வல்லமையான பிரதிநிதியாய்க் காணப்பட, பிரியமான வாசனையும் சமூகத்திற்கு ஆசீர்வாதமாயிருக்க ஜெபி.

**மாநில அரசுக்காக:** மாநில நிதிக்கு சரியான பொறுப்பாளியாக, ஏழைகளுக்கு முறையான நியாயமான் பகிர்ந்தளிப்பு செய்ய, வெள்ளம் போன்ற பேரிடரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் நேர்மை.

**பாதுகாப்பிற்கு ஜெபி:** சில வருடங்களாக கிழக்குக் கரையோரப் பகுதிகளில் ஏற்படும் வெள்ளப்பேரிடர்களை கவனி. தேவன் இரக்கம் காண்பித்து,வெள்ளத்தை நிறுத்த ஜெபி. மலேசிய தாய்லாந்து எல்லைப்பகுதிகளில் இராணுவ அத்துமீறல்கள் நிமித்தம் பாதுகாப்பு கிடைக்க ஜெபி.

# பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்



அழைக்கப்பட்ட விருந்துக்கு வெளியே, நாம் இரக்கத்திற்கு வேண்டுதல் செய்து, சாகும் வரை பட்டினி கிடக்க வேண்டும் எனும் கூற்றினை ஏற்றுக்கொள்ளதே. மாறாக தேவ இரக்கத்தில் கிடைக்கப்பெறும் தூய மகிழ்ச்சியை, தனிப்பட்ட விதத்தில் அனுபவிப்பதற்கு, எல்லையற்றதும், இலவசமானதும், இயேசு கிறிஸ்து மூலமாகவும் இன்றைய சுழ்நிலையில், நாம் பெற்றுக்கொள்ள முடியும் எனும் நம்பிக்கை, நமக்கிருக்க வேண்டுமென்று, டோசர் என்பவர், பரிசுத்தவானவரின் அறிவு எனும் புத்தகத்தில் நினைவுறுத்துகிறார்

ஆனால் தேவனுடைய விருந்தின் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள வேண்டும். இயேசு ஆயக்காரரோடும் பாவிகளோடும் அமர்ந்து உண்ணுகையில், பரிசேயர்களால் விமர்சனம் செய்யப்படுகிறார். அப்பொழுது -யேசு, பலியையல்ல,இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள். நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என பதிலளித்தார் (மத் 9:13). மத சடங்குகள், கடப்பாடுகள், பலிகளையும் அனுசரித்தும் கூட தேவனுக்குத் தூரமாகவும், மக்களிடம் இரக்கமில்லாமலும் நடந்து கொள்ள முடியும்.

இலவசமாய் பெற்றீர்கள், இலவசமாய் கொடுங்கள் என இயேசு நினைவுறுத்துகிறார். தேவன் நம் பெரும் பாவக்கடனை அடைத்துப்போட்டதினால், அந்த கிருபையையும், இரக்கத்தையும் மற்றவர்களிடம் காண்பிக்க வேண்டும். நீ அடைக்க வேண்டிய கடன் ஏதாவது உண்டா? மற்றவருடன் தேவ இரக்கத்தை நீ பகிர்ந்து கொள்ளுவதற்கு நீ என்ன கீழ்ப்படிதலின் படிகளை எடுக்க வேண்டும்.?

**ஜெபி:**

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : திரங்கானு**

**மனதுருக்க இருதயத்திற்காக ஜெபி:** திரங்கானுவில் உள்ள சபைகள், தயவும் அன்பும் கொண்டு சுவிஷேத்தைக் எடுத்துச்செல்ல ஜெபி. சபைகளின் அனலை எரியூட்டச்செய்ய ஜெபி.

**தீவிரவாதத்திற்கு எதிராகவும், மிதவாதம் ஓங்கவும் ஜெபி.** இந்த மாநிலத்தில் உருவாகும் தீவிரவாதத்திற்கு எதிராக ஜெபி.

**அரசுக்கும், அரசு சாரா இயக்கத்திற்கும் உள்ள ஒத்துழைப்பிற்காக ஜெபி:** குறிப்பாக வெளளப்பெருக்கு இடம் பெறும்போது. இப்பகுதியில், இனவாத அரசியல் திட்டங்களுக்கு எதிராக ஜெபி. அவசர வேளையின்போது இன்னும் சிறந்த முறையில் இயத்தமாக செயல்பட ஜெபி.

## சீர்குலைச்சலுக்குப் பிற்பாடு மறுபடியும் கட்டுதல்



எருசலேமின் சுவர்கள், இன்னும் இடிந்துகிடக்கிறதைக் கேள்விப்பட்டபொழுது, நெகேமியா அதிர்ச்சி அடைந்தாலும், அவன் சும்மா உட்கார்ந்து இருக்க முடியவில்லை. ஏதாவது செய்ய வேண்டும். ஆனால் எங்கே துவங்குவது என அறியாதிருந்தான். எனவே தேவனிடம் திரும்பினான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி:

(நெகே 1:4)

பெர்சிய இராஜாவுக்கு பானபாத்திரக்காரனாக இருந்த நெகேமியாவுக்கு, இராஜாவின் கண்களில் தயவு கிடைக்கும்படி தேவன் செய்து, எருசலேமின் சுவரை கட்டும்படிக்கு, நெகேமியாவை அனுப்பினதுமல்லாமல், அவற்றை சீர் செய்ய சாதனங்களையும் கொடுத்து அனுப்பினான்.

நம் தேசத்தின் அநேக திட்டங்கள் தோல்வியில் முடிந்து மறுசீர் செய்யும் நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதைக் காணும்போது, நமக்கு சோர்வு ஏற்பட்டு என்ன செய்வது, எங்கே துவங்குவது எனத் தெரியாது நிற்கிறோம்.

சுவரை மறுபடியும் கட்ட நெகேமியாவைப் பக்குவப்படுத்தி, இந்த பெரிய வேலையை செய்ய வைத்தவர், நமது தேசமாகிய மலேசியாவைக் கட்டும் திறனையும் நமக்குத்தந்தருளுவார். நம் வாழ்க்கையின் பல சீர்குலைவுகளை சீர் செய்வது, தேவனுக்கு அதிர்ச்சியூட்டும் அல்லது பெரிய காரியமோ கிடையாது. அவருடைய பரிபூரணத் திட்டமும் வியூகமும் நிறைவேற அவசியமான அவருடைய தயவு கிடைக்கப்பெறவேண்டி, நாமும் அவரிடம் திரும்புவோம்.

**ஜெபி:**

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : பெர்லிஸ்**

**மனித கடத்தலுக்கு எதிராக ஜெபி:** மலேசிய தாய்லாந்து எல்லையில் அமைந்துள்ள வாங் கெலியான் எனும் இடம்தான், குடியேறிகளை பதுக்கி வைத்திருந்த தளமாக இருந்திருக்கிறது. கடந்த வருடம் கடத்தல்காரர்களால் பதுக்கி வைக்கப்பட்டிருந்தபோது, மரித்துப்போன அநேகருடைய சடலங்கள், கைவிடப்பட்ட முகாம்களில் கண்டெடுக்கப்பட்டது. இந்த கொடூர மனிதாபிமான மற்ற மனித கடத்தல் வியாபாரத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வர, பெருமளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட ஜெபி.

**குடும்பங்களுக்காக ஜெபி:** குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபி. பெற்றோர்களை விவாகரத்திலிருந்தும் அவர்கள் பிள்ளைகளின் தீய ஆலோசனையிலிருந்து (போதைப்பழக்க தாக்கம்) பாதுகாக்கப்பட ஜெபி. தனித்து வாழும் தாய்மார்கள் வலுவடைய ஜெபி. அதிகமானோர், மாநில சமூக நல உதவிகளையே நம்பி வாழுகின்றனர்.

**மேம்பாட்டுத்திட்டங்களுக்காக ஜெபி:** புறநகர்ப்பகுதிகளில் வாழும் பெரும்பகுதி பெர்லிஸ் ஜனங்கள், விவசாயத்தை நம்பியிருக்கின்றனர். கர்த்தர் அவர்களின் பயிர்களை ஆசீர்வதிக்கவும், புத்தாக்க தொழில் நுட்பத்தின் வழி வருமானம் பெருக்கி சீராக வாழவும் ஜெபி.

## அழைப்புக்கு கீழ்ப்படிதல்



எழுந்து, விசுவாசப்படியை எடுத்து துவங்கும் ஒரு காலம் வரும். அதைத்தான் நெகேமியா செய்தான். என்ன செய்ய வேண்டும் என அவன் அறிந்துகொண்டான். தனக்கு முன்பதாக என்ன சவால்கள், எதனைக்கொண்டுவரும், என வகைகள் அறியாதிருந்தும் தேவன் தம்மோடு இருக்கிறார், எனும் நிச்சயம் ஒன்றே போதுமானதாயிருந்தது. அதுதான் அந்த அழைப்பு என அவன் அறிந்திருந்தான்.

பின்பு நான் அவர்களை நோக்கி: எருசலேம் பாழாயிருக்கிறதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறதையும், நாம் இருக்கிற சிறுமையையும் பார்க்கிறீர்களே நாம் இனி நிந்தைக்குள்ளாயிராதபடிக்கு, எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி,

என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறதையும், ராஜா என்னோடே சொன்ன வார்த்தைகளையும் அவர்களுக்கு அறிவித்தேன். அப்பொழுது அவர்கள்: எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள். (நெகேமியா 2:17-18)

நமது தேசத்தைச் சுற்றி விலைவாசி ஏற்றம், அதிகரிக்கும் குற்றவியல், வீழ்ச்சி அடையும் பொருளாதாரம், நியாயம் தராத நீதி, அரசியல் கொந்தளிப்பு போன்றவற்றை நாம் காணுகிறோம்

அவருடைய சபையாக, ஜனங்களாக, கட்டுபவர்களாக, சேனையாக - தேசத்தின் தோல்விகளை மீட்கும் அவருடைய திட்டங்களை தேடி, அறிந்து உடனடியாக வேலையில் இறங்கவேண்டும்.

**ஜெபர்:**

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : நெகிரி செம்பிலான் யாங் டிபெர்துவான் பெசார் அவர்தம் குடும்பத்தை ஆசீர்வதிக்க ஜெபி:** அவர்கள் நவீன மாற்றங்களுக்கும், இன ஒற்றுமைக்கும், நல்ல ஆட்சிக்கு வித்திடும் தடுமாறாத தூண்களாகக் காணப்படு ஜெபி.

**மாநில மேம்பாட்டு முயற்சிகள். ஊழலிருந்து விடுபட்டு, விவேகத்துடனும், பொறுப்புடனும் மாநிலத்தை மேம்படுத்த ஜெபி.** இந்த பிரயாசங்களை தேவன் ஆசீர்வதித்து அவர்களை செழிப்புறச்செய்வாராக.

## நீ எங்கே செல்கிறாய்?



ஜி.பி.எஸ். கருவியை நம்பி இடத்தைக்கண்டுபிடிக்கும் படலத்தின்போது, பாதி வழியில் சமிக்ஞை நின்றுபோனதும், தவறான திசையில் கொண்டு சென்றதும் உண்டா? அப்படியென்றால் ஓரிரண்டு காரியங்கள் யூகிக்கலாம். உனது கருவியின் திறன் சீர் செய்யப்பட வேண்டும் அல்லது தரம் உயர்த்தப்படவேண்டும்.

இராஜா அரண்மனையின் திசை நோக்கி, நெகேமியாவின் ஜீவியம் சென்றுகொண்டிருக்கிறது. அவனுக்கு முக்கியமான பங்கு இருந்தது. குடிக்கும் பானத்தில் ஏதும் நச்சு கலந்திராமல் இருக்க இராஜா இவனை நம்பியிருக்க வேண்டியிருந்தது.

பிறகு ஜீவியம் எதிர்பாராத திருப்புமுனைக்கு செல்லுகிறது. எருசலேமின் சுவரைக்கட்டும் பணிக்கு அவனை நியமித்தபோது, அவன் கீழ்ப்படிந்தான். நாம் பிறவாவதற்கு முன்பாகவே, என்னென்ன காரியங்கள் நம் ஜீவியத்தில் தேவ திட்டப்படி நடக்க வேண்டுமென்பது, எதிர்பாராததாக அமைந்து விடுகிறது. அப்படியிருந்தும் அவை பூரணமானதும், தோல்வியற்றதும், நம்மை சிருஷ்டித்தபோது, நமக்கு நியமித்த இலக்கை அடைகிறதாக இருக்கிறது. ஆயினும் நாம் அவரைத்தேடவும் கீழ்ப்படியவும் மறுக்கும்போது, அது ஜி.பி.எஸ்.போலவே நீ செல்ல வேண்டிய திசையிலிருந்து வேறு கொண்டு சென்று விடும். தேவ வழி நடத்துதல் உன் ஜீவியத்தில் காணப்பட செயல்படுகிறாயா?

**ஜெபி:**

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : பஹாங்**

**பஹாங்கிலுள்ள ஓராங் அஸ்லிக்கு சம வாய்ப்புகள் வழங்கப்பட ஜெபி:** பல புர்வீகத்தினருக்கு மாநிலத்தின் வன உள்பகுதி கூடார வாசமாக காணப்படுகிறது. மேம்பாட்டுத்திட்டங்களுக்காக இவர்கள் ஓரங்கட்டப்படுகிறார்கள் அல்லது வெளியேற்றப்படுகிறார்கள். நியாயம் செய்கிற அதிகாரிகள் ஓராங் அஸ்லி நலனைப்பேண நியமிக்கப்படும்படி ஜெபி

**பஹாங் மாநிலத்தின் நில வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறதற்கு எதிராக ஜெபி**. வெடிவைத்து தகர்க்கப்படும் நிலங்கள் பொறுப்பற்றவர்களால் செயல்படுத்தும்போது, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஜெபி. அது சுற்றுச்சுழலை மாத்திரம் அல்ல, சுற்றுப்புற பகுதியில் வாழ்கிறவர்களுக்கு ஆபத்தையும் கொண்டு வருகிறது.

## பிரித்தெடுக்கப்படுதல்



எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக . எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும் . ஆம், எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும். சங்கீதம் 90:17

கட்டுகிறவர்கள் பணியைத்துவங்கும்பொழுது, அவர்கள் செய்த அனைத்தையும் அவர்கள் தேவனுக்கு பிரதிஷ்டை செய்தனர். தேவன் ஆணையிட்டதைத்தான் அவர்கள் செய்கிறார்கள் என அவர்கள் அறிந்திருந்தனர். எனவே தேவன் அவர்களுக்கு சகாயம் செய்து, வரும் சவால்களை எதிர்நோக்க அவர்களை ஸ்திரப்படுத்துவார்.

தேவன், தன் பிள்ளைகள் அனைவரையும், கட்டுகிறவர்களாக இருக்க ஆணையிடுகிறார். அவருடைய -ராஜ்ஜியத்தை, இப்புவியில் நம்மைக்கொண்டு, ஜனங்களை சீஷத்துவத்தில் கட்டுவதின் வழியாக, தேசத்தைக் கட்டுகிறவர்களாக்குகிறார். இயேசு கிறிஸ்துவின் மூலமாக, நாம் பிரித்தெடுக்கப்பட்டு, அவருடைய பிரசன்னத்தை நாம் நமது பணி முழுவதிலும் எடுத்தியம்ப, வேதம் நமக்குக் கற்றுக்கொடுக்கிறது.

வீழ்ச்சியின் சுபாவத்தன்மையை நாம் கொண்டிருப்பதினால், நம் பணிகளையும், நம் ஜீவியத்தையும், அனுதினமும் அவருக்கு பிரதிஷ்டை செய்வது அவசியமாகிறது. கர்த்தாவே என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக என சங்கீதக்காரன் ஜெபிக்கிறான்.(சங்கீதம் 19:14)

உன் ஜீவியத்தையும் பணிகளையும் ஆண்டவருக்கு பிரதிஷ்டை செய்ததில் மனநிறைவு கொண்டிருக்கிறாயா? அவருடைய வழிகளில் நீ நடக்கும்பொழுது, நீ முடியாது என நினைத்த காரியங்களைவிட இன்னும் பெரிதானதான விதத்தில் உன்னை வழிநடத்துவார்.

ஜெபர்:

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : சபா**

**சபா எல்லைகளை ஆண்டவர் பாதுகாக்க ஜெபி:**
அதிர்ச்சியூட்டக்கூடிய எண்ணிக்கையில், ஆள்கடத்தல் மற்றும் இராணுவ ஊடுருவலின் அதிகரிப்பிற்கு, திறந்தவெளியாக இருக்கிறது

**ஊழலின் கோட்டையை மேற்கொள்வதற்கு ஜெபி:**
ஊழல் புரையோடிப்போவதற்கும், மாநிலம் செழிப்பாக மாறும் தடைக்கல்லும், அகற்றப்படவேண்டும். நீதியுள்ள அரசாங்கமும் செழிப்பான மாநிலமாகத் திகழ்வதற்கு பாதுகாப்பும் கிடைக்க ஜெபி.

**சபாவின் சபைகளை தேவன் பாதுகாக்கவும் உயிர்ப்பிக்கவும் ஜெபி:** கலங்கரை விளக்காக, ஆசீர்வாதமாக, மாநிலத்திலுள்ள எல்லா இருளின் பிரதேசங்களிலும் கிறிஸ்துவின் ஒளி சென்று, எல்லா கோத்திரங்கள் மற்றும் நாவுகளுக்கு நம்பிக்கை கொண்டு வரவும் ஜெபி.

## யுத்தம்பண்ண உற்சாகம்



அவர்களுக்குப் பயப்படாதிருங்கள் நீங்கள் மகத்துவமும் பயங்கரமுமான ஆண்டவரை நினைத்து, உங்கள் சகோதரருக்காகவும், உங்கள் குமாரருக்காகவும், உங்கள் குமாரத்திகளுக்காகவும், உங்கள் மனைவிகளுக்காகவும், உங்கள் வீடுகளுக்காகவும் யுத்தம்பண்ணுங்கள் ...நம்முடைய தேவன் நமக்காக யுத்தம்பண்ணுவார்.(நெகேமியா 4:14,20)

கட்டுபவர்கள், களைப்படைந்து சோர்ந்து போனார்கள். வாரக்கணக்காக செய்து வந்த பணியானது களைப்படையச் செய்தது. அருகாமையில் உள்ள தலைவர்கள் அவர்களை நிந்தித்தும், தாக்குவதற்கு மிரட்டலும் விடுத்திருந்தனர்.

தேவன் அழைத்து, உன்னை குறிப்பிட்ட பணியினை செய்யச்சொன்னார் என அறிந்திருந்தும், அவ்வித சோர்வு ஏற்பட்டுள்ளதா? எலியா தீர்க்கதரிசி அப்படி உணர்ந்தான். தன் ஜீவனுக்குப் பயந்து ஓடுகிற வேளையில், அழைப்பை விட்டு விடலாம் என்று கூட நினைத்து விட்டான்.

ஆண்டவர் அவனிடத்தில் வந்தார், போஷித்தார், இளைப்பாறச்செய்தார். அவன் பலப்பட்டபோது தொடர்ந்து புறப்பட்டான்.

நாமும் களைத்து சோர்வடையும்பொழுது, என்னிடத்தில் வா என இயேசு கூறுகிறார். என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார் (சங்கீதம் 73:26) அவருடைய சமுகத்தில் கிடைக்கும் பலனை தாவீது சொல்லுகிறார்.

யுத்தம் செய்ய அங்கே நமக்கு அதீத வல்லமையும், ஊக்கமும் கிடைக்கும் - தனிநபரான நம்முடைய பயண இலக்கிலும், தேசத்திலும். உலக சக்திகள் நம்மை நிறுத்தக்கூடும், ஆனால் அவர் நிறுத்தக்கூடாமல் இருக்கும் வல்லமையானவர். அவர் நமக்காக யுத்தம் பண்ணுவார். நீ எதிர்கொள்ளும் உன் வாழ்க்கையின் எதிர்ப்புகள் யாவை? தேவனிடம் கொண்டு வா. அவரே உன்னை விடுவிப்பவர்.

ஜெபி:

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : சரவாக்**

மாநிலத்தின் சட்டவிரோத வெட்டுமரப்பணிகளுக்கு எதிராக ஜெபி. பூர்வீகத்தினருடைய பாதுகாப்பிற்காகவும், உரிமைகளுக்காகவும் ஜெபி.

அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் பிரச்சாரத்தின்போது கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற ஜெபி

புறப்பகுதியில் வசிக்கும் மக்கள், அடிப்படை வசதிகள் குறிப்பாக கல்வி வாய்ப்புகள் கிடைக்க ஜெபி

சரவாக் சபைகளின் ஒற்றுமைக்காக ஜெபி

## ஜெப பீடம்: ஆவிக்குரிய வாசல்



ஆதியாகமம் 12:1-8. வாசி

சரீர - ஆவிக்குரிய மண்டலத்திற்கு மத்தியில், ஜெப பீடம் ஆவிக்குரிய வாசலாகக் காணப்படுகிறது. தேவன் மனிதனை சிருஷ்டித்தபொழுது, இந்த புமியை ஆண்டுகொள்ள அவனுக்கு அதிகாரம் தந்தார். அப்படிப்பட்ட அதிகாரம் பெற்றவனுக்கு, யாரை ஆராதிக்க உள்ளே அனுமதிக்கிறானோ அழைக்கப்பட்டவர் நுழைவதற்கு உரிமை கொடுக்கிறான். எனவே ஜெப பீடம் என்பது ஜெபிக்கும் ஸ்தலத்திற்கு மேலானது. ஒரு ஸ்தலத்திற்குள் ஆவிக்குரிய சக்தி நுழையும் வாசலை உருவாக்குகிறதற்கு சமன்.

ஆபிரகாமை கானானுக்குள் தேவன் அழைத்தபொழுது, அந்த நிலம் அதற்கு முன்பதாகவே மற்ற தேவர்களுக்கு, பலி செலுத்தும்படி கட்டப்பட்ட, பல பீடங்கள் அங்கே காணப்பட்டன. அங்கே ஆபிரகாம் நுழைந்தபோது, அவன் பீடங்களை ஏற்படுத்தி, தேவனுக்கு பலிகள் செலுத்தி, ஆராதனை செய்து, அந்த ஸ்தலத்தில் ஆண்டவருடன் உடன்படிக்கை செய்துகொண்டான். இவ்விதமாக அவன் அந்த ஆவியின் மண்டலத்தை மாற்றி, அதை சுதந்தரித்துக்கொண்டான்.

அதே சமயம் நாம் ஜீவிக்கிற ஸ்தலம்,வேலையிடம், ஆராதனை மையம் இவைகளில் நாம் ஆவிக்குரிய சுழலை ஆக்கிரமித்துக்கொள்ளும்படி, தேவன் விரும்புகிறார். தேவனுக்கு நாம் ஜெப பீடம் கட்டும்போது மாத்திரம்தான், நாம் இதனைச் செய்ய முடியும். உம் சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக என இயேசு கற்றுக்கொடுத்தார். எங்கே அவருடைய இராஜ்ஜியம் கட்டப்படுகிறதோ அங்கே இருள் அகன்று போக வேண்டும். அவருடைய இராஜ்ஜியத்தை வரவேற்பதற்கு, ஜெபபீடம் நீங்கள் எழுப்பி விட்டீர்களா?

**ஜெபி:**

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : கூட்டரசுப்பிரதேசம் - கோலாலம்புர்**

**பட்டணத்து ஏழைகளை சந்திக்கும் பிரயாசத்திற்காக**

**ஜெபி:** வீடுகளின்றி, பாலத்திற்கு அடியிலும், நடைபாதையில் படுத்துறங்குவதும், புறம்போக்கும் நிலத்தில் அடைத்துக்கொண்டும், அரசாங்க அடுக்கு மாடி வீடுகளில் சிறடிக்கப்பட்டு வாழுவதும் பரவலாக உள்ளனர். அரசு மற்றும் அரசு சாரா இயக்கங்கள் எடுக்கிற முயற்சிகளில், இந்த நகர்ப்புற ஏழைகளின் வாழ்க்கைத்தரம் உயரவும், தங்கள் ஜீவனத்தை நடத்தும் அளவிற்கு வேண்டிய சாதனங்களும் கிடைக்க ஜெபி. எல்லாவித ஊழல், மற்றும் சுய லாப போக்குடைய முயற்சிகள் முறியடிக்கப்பட ஜெபி.

**குற்றவியலுக்கு எதிராக ஜெபி:** அண்மைய காலமாக ஏழ்மையின் காரணமாக போதப்பழக்கங்கள், குண்டர் கும்பல் நடவடிக்கைகள் நிமித்தமாக அதிகரிக்கும் ஆபத்துகள், கோலாலம்புரை பீடித்துள்ளன. காவல் படையினர். இன்னும் திறமையோடு, குற்றங்களுக்கு எதிராக போர் புரியவும். தேவன் தாமே பட்டணத்தை காவல் காக்கும்படியும்,கதறி ஜெபி. தீவிரவாத தாக்குதல்கள், மற்றும் இதர பாதுகாப்பு அம்சங்களை, தேவன் பாதுகாக்க ஜெபி.

# பரிசுத்த அசுத்த பீடங்கள்



ஆதியாகமம் 19: வாசி

பரிசுத்த பீடம், எப்படி நிலத்தை தேவனுக்கென கோருகிறதோ, அதுபோலவே அசுத்த பீடங்களும், தீய பிரசன்னத்திற்கு அந்த நிலத்தை கோருகின்றன. (ஜெபபீடம் - ஜோன் முலிண்டே)

தன் தகப்பனுடைய சகோதரனாகிய ஆபிரகாம், பீடங்களைக் கட்டி வந்ததை லோத்து கண்டிருந்தும், ஒரு இடமாகிலும் கர்த்தருடைய நாமத்தை அழைத்தானில்லை. அதின் விளைவு அவன் தன் மனைவியை, செல்வங்களை மேலும் தன் வரலாற்றையே இழந்தான். அவனுடைய மகள்கள், தன் தகப்பனுடனான தவறான உறவினால், பக்தியற்ற சந்ததியான, அம்மோனியர்களையும் மோவாபியர்களையும் உருவாக்கினர்.

எங்கே அசுத்த ஆவிகளுக்கு பீடங்கள் ஏற்படுத்தப்படுகிறதோ, அவைகளுக்கு அந்த ஸ்தலத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டு, அங்கே குடியிருப்பவர்களின் மத்தியில், துன்மார்க்கம் நிரம்பச்செய்ய இடமளிக்கப்படுகிறது. அவைகளுக்கு எதிராக போரிடவேண்டுமானால், நமது ஆண்டவருக்கு, பரிசுத்த பீடங்களை ஏற்படுத்தும் முயற்சியில் நாம் இறங்கி, அவரை வரவேற்று, அவரை பணிந்து கொள்வதின் மூலமாகத்தான் முடியும்.

உன் சுற்றுப்புற அண்டை வீட்டாரை கவனி. எத்தனை அசுத்த பீடங்கள் நிறுவப்பட்டுள்ளன? என்னவித ஆவி நம் மண்ணில்வரவேற்கப்பட்டுள்ளன. நம் வாழ்க்கையில், அதின் விளைவுகள் என்ன? பரிசுத்த ஆவியா? அல்லது அசுத்த ஆவியா? எதற்கு அதிக இடம் அளிக்கப்படுகிறதோ அதுதான் நம் ஸ்தலத்தை ஆக்கிரமிக்கும்.

ஜெபி:

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : லாபுவான் கூட்டரசுப்பிரதேசம்**

**சட்டத்தை இன்னும் கடுமையாக கையாள ஜெபி:** தீர்வையற்ற அனைத்துலக துறைமுகமாக லாபுவான் விளங்குவதால், வாணிபத்தோடு கூட விபச்சாரம், பொருள்கடத்தல் போன்ற தீமையான நடவடிக்கைகள் இடம்பெறும். எல்லையின் ஊடுருவல்கள் இல்லாமல் மாநிலத்தை பாதுகாக்க தேவனிடம் ஜெபி

**லாபுவான் சபைகளுக்கு ஜெபி:** இருளுக்கு வெளிச்சமாகவும், தேவையுள்ளவர்களுக்கு அடைக்கலமாகவும் இருக்க ஜெபி. ஜெப பீடங்கள் நிறுவப்பட்டு, மாநிலத்தை அவருடைய இராஜ்ஜியத்திற்கென மீட்கவும், பெரிய எழுப்புதல் வரவும் ஜெபி.

# தேவனுடைய பிரசன்னம்



யாத்திராகமம் 33:7-19 வாசி

ஜெப பீடத்தின் சாராம்சம் என்னவென்றால் தேவ பிரசன்னத்திற்கு வருவது

நமதுஜெபக்கூட்டத்தின் பெரும்பகுதி,மன்றாட்டும் பதில்களுமாயிருக்கிறது. ஆனால் ஜெப பீடமோ, தேவனையே மையமாகக்கொண்டுள்ளது. தேவனுடைய பிரசன்னம் நம்மோடு வாசம் பண்ணுவதற்கு, ஜெப பீடத்தில் நாம் தேவனுக்கு ஆராதனை செய்ய முனைகிறோம். நம்மை சந்திப்பது மாத்திரமல்ல, தேவன் நம்மோடு வாழ நாம் வாஞ்சிக்கிறோம். கிறிஸ்தவனை, மற்ற உலகத்தாரோடு வேறுபடுத்துவது என்ன? அது தேவ பிரசன்னம்தான்.

தேவ பிரசன்னம் திடமானது. தேவனை அறியாதவன்கூட, அவரைத்தொட்டு உணரக்கூடும். அவருடைய பிரசன்னத்தில், வியாதியஸ்தர் குணமாகுவர். பிசாசு பிடித்தவன் விடுதலையாகி, இரட்சிப்பைக்காண்கிறான். தேவன் நம்மில் கனப்படும்போது, நமது சபையிலும் இல்லங்களிலும் ஓர் உருமாற்றத்தை நாம் காணமுடியும்.

யோவான் 15:5 ல் இயேசு கூறுகிறார்: நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் . என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. அவரில் நிலைத்திருப்பது என்பது, அவருடைய பிரசன்னம் நம்மில் காணப்படுகிறது என்பதாகும். அவருடைய பிரசன்னம் இல்லாமல் நம்மால் நிலைத்திருக்க முடியாது.

தெய்வீக நிலைத்திருத்தலில் இயலும்படி செய்தலும், தன்னை சிருஷ்டித்தவரிடம் ஐக்கியம் கொள்ளுவதும்தான், மனிதனுடைய அதிகாரத்தின் இரகசியம். (ஜெபபீடம் - ஜோன் முலிண்டே)

நமது சரீரமே தேவனுடைய ஆலயமாக இருப்பதினால், பீடத்தின் இருப்பிடமானது நமது இருதயமே.

ஜெபர்:

**மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி : கூட்டரசுப்பிரதேசம் புத்ராஜெயா**

**புத்ராஜெயாவில் இயங்கும் ஒவ்வொரு அரசு துறைக்காகவும்**

**ஜெபி:** தேவன் அவர்களை ஆசீர்வதித்து, தம் ஞானமும், நீதியும், நேர்மையும், மழையாக பொழியப்பண்ணி, ஆசீர்வதிக்க ஜெபி. அவர்களுக்கு வியூகமும் நல்ல ஆட்சி முறையும் அருளி, உக்கிராணத்துவத்தை தேசத்தில் காண்பிக்க ஜெபி.

**அதிகாரத்திலும் ஆளுமையிலும் பக்தி நிறைந்த ஆண்களும் பெண்களும் அதிகமாக நியமிக்கப்பட ஜெபி.** அங்கே ஏற்கனவே பணிசெய்கிறவர்களை தேவன் ஆசீர்வதித்து பலப்படுத்த ஜெபி.

ஆகஸ்ட் 30 நாள் 24 ஜெப பீடம்: பலியும் ஆராதனையும் செலுத்தும் இடம்

நாள் 24

ஆகஸ்ட் 30

# ஜெபபீடம் : பலியும் ஆராதனையும் செலுத்தும் இடம்



ரோமர் 12:1-3 வாசி.

நாம் ஜெப பீடத்தில் என்ன செய்கிறோம்? நமது சரீரத்தை ஜீவனுள்ள பலியாகவும் உண்மையான ஆராதனைக்கும் ஒப்புக்கொடுக்க வேண்டுமென பவுல் சொல்கிறார்.

பீடம் என்றாலே, அங்கே பலியும் உண்டு என நாம் கொள்ளலாம். ஆராதனைக்கென பீடம் நிறுவப்படும்போது, அந்த பீடத்தின்மேல் பலிசெலுத்துவது, அந்த பீடத்தை கனப்படுத்துவதாக காணப்படுகிறது. ஏன் தீங்கானது இன்று பெருகி செழிப்பாகிறது என்றால், அநேகர் அதற்கு பலிகளை செலுத்தியும், அந்த அசுத்த பீடத்தில் தங்களையே அர்ப்பணம் செய்கிறவர்களாகவும் இருக்கின்றனர்.

அதே வண்ணமாக, நமது ஜெப பீடத்தில், நமது நேரம், நம் சிந்தை, நம் பற்றுதல் நமது வாழ்க்கை போன்றவற்றை பலிகளாக செலுத்துகிறோம். உபவாசம் ஒரு விதத்தில் பலிதான் - இயேசு 40 நாள்கள் உபவாசம் பண்ணி சாத்தானின் சோதனைகளை ஜெயம் கொண்டார்.

நாம் உபவாசிக்கும்போது, அவரை ஆராதிக்கவும், அவர் நாமத்தை உயர்த்தவும், சில மணி நேரங்களை வேதத்தை வாசிக்க, நாம் ஒதுக்கி வைக்கிறோம். அப்பொழுது நமது பங்கு அவருக்காக இன்னும் அதிகரிக்கும்.

ஜெபி:

**மலேசிய மக்களுக்காக ஜெபி : மலாய்க்காரர்**
**தேவன் அவர்களை ஆசீர்வதிக்க, பாதுகாக்க, செழிப்படையச்செய்ய ஜெபி:** மலேசியாவின் ஜனத்தொகையில் பெரும்பகுதி அவர்களே. குறிப்பாக புறப்பகுதிகளிலே வசிக்கும் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளின் கல்வித்தரத்தை உயர்த்தவும், அவர்களுக்கு வழங்கப்படுகிற வாய்ப்புகளை தட்டிக்கழிக்காமல் இருக்கவும் ஜெபி

**இன சுபீட்சம்:** மக்கள் மத்தியில் இன, மத கோட்பாடு வேறுபாடின்றி ஜீவிக்க ஜெபி.

நாள்
25

ஆகஸ்ட் 31

## ஜெப பீடம்: சபை பீடங்களைக்கட்டுவது



அப்போஸ்தலர் 2:42-47வாசி

நவீன நாள்களைப் போலல்லாமல், ஆரம்ப கால சபை, நிகழ்வுகளையும் ஊழியங்களையும் அதிகமாக முன்வைக்கவில்லை. அவர்களின் அதி முக்கிய பங்கு ஆராதனை, ஐக்கியம், வேத வார்த்தை, ஜெபம் போன்றவற்றிற்கு அர்ப்பணம் செய்யப்பட்டது. எனவே ஆதியில் இருந்த சபைகள், தேவனுடைய பீடத்திற்கு முன்பாக, தினமும் ஒப்புக்கொடுத்தவர்களாய் இருந்தார்கள்.

என் ஆலயம் ஜெப வீடாய் இருக்கிறது, என இயேசு சொன்னதாக, மத்தேயு விவரித்திருக்கிறார். நமது நிகழ்ச்சிகளை, இயேசு அங்கீகரிக்கிறதற்கான ஒரு வழிதான் ஜெபம், என இயேசு சொல்லவில்லை. அவருடைய வீடு, அல்லது சபையில், ஜெபத்தை ஒரு பகுதியாக இல்லாமல் அதுவே முகாமையானதான வைத்திருக்க வேண்டும் என சொல்லுகிறார். அப்பொழுது அங்கிருந்து புறப்படுகிற அனைத்து ஊழியங்களும், தேசத்திற்கேகூட பலன் கொண்டு வரும்.

தேவனுடைய பிரசன்னத்தினால், சபையார் தங்களுடைய சொந்த பீடங்கள் எரியூட்டப்படுவதற்கு, சபையில் ஜெபமானது அவசியமான பீடமாக விளங்குகிறது. சபையாக குழு பீடத்தில் செயல்படுத்த வேண்டி, நேரத்தை முதலீடு செய்கிறபோது, அதின் உறுப்பினர்கள் இன்னும் அதிகமாய் தேவனை நேசிப்பதில் வளர்ந்து, தங்கள் சொந்த பீடத்தை, தனி ஸ்தலங்களில், குடும்பத்தில், பணிமனைகளிலும்கூட ஏற்படுத்த உந்தப்படுவார்கள்.

நமது சபைகளில், இல்லங்களில் சமுதாயத்தில் ஏற்படுத்தும் இந்த ஜெப பீடங்கள் வழியாகத்தான், நம் பட்டணங்களில் உள்ள நிலைகளை மாற்ற முடியும்.

மெர்டேக்கா. நமது சுதந்திர தினத்தை நாம் அனுசரிக்கும் வேளையில், இயேசு கிறிஸ்துவின் மீட்பின் திட்டத்தினால், உண்மையான விடுதலை பெற, தொடர்ந்து விடாது ஜெபிப்போம்.

ஜெபி:

**மலேசிய மக்களுக்காக ஜெபி : சீனர்கள்**
**தேவன் சீன சமுதாயத்தை ஆசீர்வதிக்க, பாதுகாக்க, செழிப்படையச்செய்ய ஜெபி:** சீன சமூகங்களின் உறுப்பினர்கள், சுவிசேஷத்தையும், இரட்சிப்பையும், ஏற்றுக்கொள்வதற்கு, கலாச்சார கொள்கைகள் ஒரு தடையாக இராதபடி ஜெபி.
**இன சுபீட்சம்:** மக்கள் மத்தியில் இன, மத கோட்பாடு வேறுபாடின்றி ஜீவிக்க ஜெபி.

நாள் 26 | செப்டம்பர் 1

## தேவனுடை சத்தம்: அறிந்து கொள், செவிகொடு, பின்பற்று



யோவான் 10 வாசி

நீ ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும். எது சரியானதென்று தெரியவில்லை, ஏனெனில் பல சத்தங்கள் கேட்கின்றன. அந்த சமயத்தில் நீ, அதிர்ச்சியில், குழப்பத்தில் நெருக்கத்தில் இருப்பதை உணர்ந்திருக்கிறாயா?

பல அபிப்பிராயங்கள், (உன்னுடையது உட்பட),பல தெரிவுகள் - எது சரியான ஒன்று என உனக்குத் தெரியவில்லை.

ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் போசொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறான். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார்.என இயேசு கூறியது (யோவான் 10:3-5)

பகுத்தறியும் செவி, கீழ்ப்படிதலுள்ள இருதயம். இவை இரண்டும் நம் எஜமானனோடு எப்பொழுதும் நெருங்கி இருப்பதின் அம்சங்கள். இவற்றை பண்படுத்த, நேரத்தை நாம் செலவு செய்ய வேண்டும்.

ஆபத்தை விட்டு விலகி ஓடும் பாதையையும், சிறந்த மேய்ச்சல் மற்றும் தண்ணீர் உள்ள இடத்தையும் காண்பிக்க, அழைக்கும் குரலை நீ அடையாளங்காண முடிகிறதா?

**ஜெபி:**

**மலேசிய மக்களுக்காக ஜெபி :** இந்தியர்களும் சீக்கியர்களும்

**இந்தியர்கள் சீக்கியர்கள் சமுதாயத்தை தேவன் ஆசீர்வதிக்க, பாதுகாக்க, செழிப்படையச் செய்ய ஜெபி:** இந்த சமூகங்களின் உறுப்பினர்கள், சுவிசேஷத்தையும் இரட்சிப்பையும் ஏற்றுக்கொள்வதற்கு, தங்கள் கலாச்சார கொள்கைகள் ஒரு தடையாக இராதபடி ஜெபி.

**அனைத்து மலேசியர்களுக்கும் சம வாய்ப்பு வழங்கப்பட ஜெபி-** குறிப்பாக கல்வி, சமூக, பொருளாதார பகுதிகளில். தேசத்தின் தலைமைத்துவ ஸ்தானங்களில் இந்திய சீக்கிய சமூகங்களின், நீதி, நியாயம் உள்ள மக்கள், பொறுப்பெடுக்க ஜெபி.

**இன சுபீட்சம்:** மக்கள் மத்தியில் இன, மத கோட்பாடு வேறுபாடின்றி ஜீவிக்க.

## தேவனுடை சத்தம்: அவர் குரலுக்கு உணர்வுள்ளவர்களாயிருப்புது



அப்போஸ்தலர் 16: வாசி

பவுலும், அவனது தோழர்களும், பட்டணந்தோறும் சென்று, சுவிஷேஷம் சொல்லினர். நெடுக அவர்கள் பயணித்தபோது, சபைகள் ஸ்திரப்பட்டு, எண்ணிக்கையில் மிகவும் பெருகின. ரோமர் ஆட்சியில் காணப்பட்ட ஆசியாவிற்கு அவர்கள் வந்தபோது, அங்கே பிரசங்கிக்கவும், ஒரு சில இடங்களுக்கு செல்லவும் வேண்டாமென, பரிசுத்த ஆவியானவர் தடை விதித்தார். அங்குதான் வெளிப்படுத்தலில் உள்ள ஏழு சபைகள் இருந்தன. பிறகு மேற்குப்பகுதிக்கு சென்றனர்.

பயணங்கள் தோறும் பவுலும், அவனது தோழர்களும், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதை, நன்கு உணர்ந்திருந்தனர். சரியான இடத்திற்கு செல்லவும், சில வேளைகளில், சிற்சில காரியங்களை செய்யவும் சொன்னார். எந்த இடத்தில் ஜனங்கள் சுவிஷேஷத்தை ஏற்றுக்கொள்வார்களென்று, தேவன் அறிந்திருந்தார்.

தேவன், தம் ஜனங்களிடம் பல்வேறு விதங்களில் பேசுகிறார். எனவே, நாம் அவருடைய சத்தத்தை அடையாளங் காண்பவர்களும், தீவிர உணர்வுள்ளவர்களுமாகி, எப்பொழுதும் வழிநடத்துகிற அவருக்கு, விழித்திருக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். நீ எடுக்கும் தீர்மானத்திற்கு, தேவனுடைய சத்தம் எப்படி வழிகாட்டுகிறது?

**ஜெபி:**

**மலேசிய மக்கள்குழுவினர்களுக்காக ஜெபி : பெரானக்கான்• பாபாஞொன்ஞா**

**பெரானக்கான்• பாபாஞொன்ஞா சமுதாயத்தை தேவன் ஆசீர்வதிக்க, பாதுகாக்க, செழிப்படையச் செய்ய ஜெபி:** இந்த சமூகங்களின் உறுப்பினர்கள், சுவிஷேஷத்தையும் இரட்சிப்பையும் ஏற்றுக்கொள்வதற்கு, தங்கள் கலாச்சார கொள்கைகள், ஒரு தடையாக இராதபடி ஜெபி.

**இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளின் மேல் நம்பிக்கையும் சடங்காச்சாரங்கள் பாபாஞொன்ஞா கலாச்சாரத்தில், முக்கிய பங்கு வகிக்கிறதாகவும் இருக்கிறது.** இந்த சமூகத்தில், அப்படிப்பட்ட நம்பிக்கைகளின் பிடிமானத்தை தகர்க்கவும், அவர்களின் இருதயம், சுவிஷேஷத்திற்கு பண்பட்ட நிலமாக திகழ்வதற்கும் ஜெபி.

**இன சுபீட்சம்:** மக்கள் மத்தியில் இன, மத கோட்பாடு வேறுபாடின்றி ஜீவிக்க.

நாள் 28 | செப்டம்பர் 3

## தேவனுடை சத்தம்: தெளிவானதும், உறுதியானதும்



மத்தேயு 2:12-23

யோசேப்பு குழப்பமடைந்தான். குழந்தை இயேசு ஆபத்தில் இருக்கிறதென்று எச்சரிக்கப்பட்டான். வானசாஸ்திரிகளால் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என சினமடைந்து, பெத்லேகேமின் ஆண் குழந்தைகளை எல்லாம் கொன்று போட, ஏரோது திட்டமிட்டிருந்தான். எனவே யோசேப்பு தன் குடும்பத்தைக்கூட்டிக்கொண்டு, எகிப்து பயணம் புறப்பட்டான்.

வருடங்கள் கழிந்து, தேவன் மறுபடியும் பேசினார். ஏரோது மரித்துப்போனான். இப்பொழுது இஸ்ரவேலுக்கு பாதுகாப்பாக திரும்பலாம். ஆனால் யூதேயாவுக்கு போகவேண்டாம் என மறுபடியும் தேவனால் எச்சரிக்கப்பட்டதினால், அவர்கள் நாசரேத்துக்குச் சென்றார்கள்.

பழைய ஏற்பாட்டில், யோசேப்பும்கூட சொப்பனங்கள் மூலமாக, என்ன செய்யவேண்டுமெனும் தேவனுடைய தெளிவான வெளிப்பாடுகளை பெற்றுக்கொண்டான்.

எவ்வித வகையில், தேவன் தம் செய்தியை சொல்லவேண்டி தொடர்பு கொண்டாலும், அது சொப்பனமாக இருந்தாலும்கூட, தேவ சத்தமானது, நாம் தெய்வீக கிருபையோடு அந்த செய்தியை பகுத்தறியவும், புரிந்துகொள்ளவும் பெலனைத் தருகிறார். தேவன் நம்மை ஒருபோதும் குழப்பமடைய அல்ல, ஆனால் தெளிவையே கொண்டுவருகிறார். யோசேப்பின் சம்பவத்தின்வழி, நமது தடுமாற்ற வேளையில், நமக்கு எச்சரிப்பும்,ஆலோசனையும், வழிகாட்டுதலும், திசையும் தந்து பேசுகிறார். அவரது சத்தத்தை மாத்திரம் நிதானிப்பதற்கு, நாம் உணர்வுள்ளவர்களாக இருக்கும்பொழுது, அவர் எந்த வகையிலும் தொடர்புகொள்ளுகிறவராக இருக்கிறார். இந்த வேளையில், உனது வாழ்க்கையில் நீ பெற வேண்டிய தெளிவு என்ன? ஆண்டவரிடம் கொண்டு வா.

**ஜெபர்:**

**மலேசிய மக்கள்குழுவினர்களுக்காக ஜெபி : செட்டி செட்டி சமுதாயத்தை தேவன் ஆசீர்வதிக்க, பாதுகாக்க, செழிப்படையச் செய்ய ஜெபி:** சிறிய ஜனத்தொகையாக இருந்தாலும், ஒரு காலத்தில் சமுதாயத்தில் மேன்மையுள்ள மக்களாக விளங்கினார்கள். சுவிசேஷமும் இரட்சிப்பும் அவர்களுக்குள் பலமாய் நாட்டப்படவேண்டி, தங்கள் கலாச்சார கொள்கைகளும் இந்து மார்க்க பிடிவாதமும் தளர்ந்து போக ஜெபி.

**இன சுபீட்சம்:** மக்கள் மத்தியில் இன, மத கோட்பாடு வேறுபாடின்றி ஜீவிக்க.

நாள் 29 | செப்டம்பர் 4

# தேவனுடைய சத்தம்: அமைதலானதும், அமைதியானதும்



1 இராஜா 19:9-18 வாசி

எலியா தீர்க்கதரிசி, தன் வாழ்க்கையில் மோசமான தருணத்தை கடந்து செல்கிறான். அவனைக்கொலை செய்ய சுளுரைத்த கொடுமைக்காரி யெசபேலிடமிருந்து, நாற்பது நாள்கள், தனியே வனாந்திர வழியாக ஓடி, தேவனுடைய பர்வதமாகிய ஓரேப் மலையை அடைகிறான். அங்கே குகை ஒன்றில் ஒளிந்துகொண்டு இராத்தங்கினான்.

பிறகு தேவன் கடந்து போக இருக்கையிலே, அவனை குகையை விட்டு வெளியே வரச்சொல்லி, மலையின்மேல் நிற்கச்சொல்லுகிறார்.

தொடர்ந்த சம்பவங்கள் சுவைமிக்கவை. முதலாவது ஒரு வலிமையான காற்று. பிறகு ஒரு நில நடுக்கம், பின்னர் ஓர் அக்கினி - ஆனால் தேவன் இவற்றில் இல்லை. மாறாக களைத்து சோர்ந்து போன எலியாவிடம், மெல்லிய குரலில் பேசுகிறார். அது தேவனுடைய தயவையும், அவரது போஷிப்பையும், கிருபையையும், காண்பிக்கிறது. கார்மேல் மலையில், அக்கினியோடு பேசினார், ஆனால் இந்த முறை காயப்பட்ட எலியா, தேவனுடைய சாந்தமான அதே வேளையில், உறுதியான நிச்சயத்தை கேட்க வேண்டுமென அவர் அறிந்திருந்தார்.

பயங்கரமும் சுறாவளியும் உள்ள நாள்களில், அவருடைய அநாதி அன்பினால், மென்மையாக நம்மை அணுகுவார். தேவனுடைய மெல்லிய சாந்தமுள்ள சத்தத்தை நீ எப்பொழுது கடைசியாகக் கேட்டாய்? அவர் என்ன சொன்னார்?

மலேசிய மக்கள்குழுவினர்களுக்காக ஜெபி : மேற்கு மலேசியாவின் ஓராங் அஸ்லி

தீபகற்ப மலேசியாவில், ஓராங் அஸ்லிகள் தான் முதலாவதாகவும், ஆயிரம் வருடங்களுக்கு மேலாக, இங்கு வசிக்கிறவர்களாகவும் இருக்கின்றனர். இந்த ஓராங் அஸ்லி இனத்தின் கலாச்சாரம், அடையாளம், ஜீவியம் போன்றவை அடியோடு அவர்களுடைய புர்வீக ஸ்தலங்களை விட்டு, இடமாற்றம் செய்யப்படும் மருட்டலே, இப்பொழுது நாம் பகிரங்கமாகக் காண்கிறோம். ஓராங் அஸ்லிவறுமைக்கோட்டிற்குக் கீழ் இருக்கிறது என சொல்லுகிறது.

ஜெபி:

**ஓராங் அஸ்லி இலாக்கா அவர்களது மேம்பாட்டுதிட்டங்கள் மற்றும் நிகழ்வுகளில் இவர்களது நேரடி ஈடுபாடும், ஆக்கிரமிப்பும் இருக்க ஜெபி**

**ஓராங் அஸ்லிகளின் பிரத்தியேகமாய் ஒதுக்கப்பட்ட வசிப்பிடங்கள் இன்னும் ஒதுக்கப் படவேண்டியவை, மேம்பாட்டுத்திட்டங்களுக்கென எடுத்துக்கொள்ளப்படாமலிருக்க ஜெபி**

ஓராங் அஸ்லி மக்கள் அவர்களது சபைகள் ஆசீர்வதிக்கப்பட இந்த சமூகத்தினரை சந்திக்க பிரயாசம் எடுக்கும் ஊழியங்களுக்காக ஜெபி. தங்கள் குழந்தைகளுக்கும் இந்த சமூகத்துக்கும் கல்வி முக்கியத்துவத்தை கொடுக்கவும், இளைய சமுதாயம் தங்கள் நில உரிமைகளை பாதுகாக்க விழிப்புணர்வைப்பெறவும் ஜெபி.

## தேவனுடைய சத்தம்: தேவனுடைய கடுமையான சத்தத்துக்கு செவிகொடுத்தல்



நேபுகாத்நேச்சார், ஒரு வல்லமையான அரசன். அண்டை நாடுகளை தம் வசம் ஆக்கிக்கொண்ட பேரரசு வலிமை அவனிக்கிருந்தது. இந்த மமதையே அவனை தலைக்கனமாக்கி, தனக்கென ஒரு கடவுளை ஏற்படுத்திக்கொள்ளும் அளவிற்கு பெருமை பிடித்தவனானான். இத்தனைக்கும் யூதர்களுடைய தேவனைத்தவிர வேறு தெய்வம் இல்லை என அவன் ஏற்கனவே அறிக்கை செய்தவன்.

(தானியேல் 2:46-47)

ஒரு சொப்பனத்தில், தேவனை அறிக்கை செய்யத் தவறினால், அவன் புத்தியை இழந்துபோவான் என எச்சரிக்கப்பட்டும், திருந்த அவன் தவறினான். தேவன், இராஜாவுக்கு கடுமையான எச்சரிப்பு கொடுத்திருந்தும் அவன் மனந்திரும்பாமல் தன் இருதயத்தைக் கடினப்படுத்தினபடியால் தேவ நியாயத்தீர்ப்பு அவனுக்கு வந்தது.

தேவன் நம்மை நேசிப்பதினால், அவர் நம்மை ஆக்கினைக்கு உட்படுத்தவோ, சபிக்கவோ நோக்கம் கொண்டவரல்ல, மாறாக மறுசீர் செய்யவும், ஆசீர்வதிக்கவுமே விரும்புகிறார். தீர்ப்பு வழங்குவதிலும் கூட, மனந்திரும்புதலுக்கும், மறுசீர் செய்வதற்கும், இடமளிக்கிறார். உன் வாழ்க்கையில், தேவன் அழிவைக்கொண்டு வரும் காரியத்தைக்குறித்து, உன்னிடம் பேசிக்கொண்டிருக்கிறாரா? சீக்கிரமாய் மனந்திரும்பு.

ஜெபி:

**மலேசிய மக்கள்குழுவினர்களுக்காக ஜெபி :**
**போர்த்துகீசியர்•கிரிஸ்டாங்**
**போர்த்துகீசியர்•கிரிஸ்டாங் சமுதாயத்தை தேவன் ஆசீர்வதிக்க, பாதுகாக்க, செழிப்படையச் செய்ய ஜெபி:** அநேகர் வெளிப்படையான கிறிஸ்தவர்கள் அல்லது கத்தோலிக்கர்களாக இருக்கின்றனர். அந்த சமூகத்தினர் மத்தியில் விசுவாச எழுப்புதல் வர ஜெபி.
கர்த்தருடனான ஒரு புதிய சந்திப்பு, ஒவ்வொருவருக்கும், சுவிஷேத்திற்கு புதுப்பிக்கப்பட்ட ஒரு தாபம் கொள்ள, தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கென வாழுவதற்கு ஒரு பற்றுதல் காண ஜெபி.

## ஜெப பீடம் எழுப்புதல் - எங்கள் தேசத்தில்



தேசீயமாக 52 ஆண்டுகள் கடந்து சென்றது. மலேசியாவில் 2 முறை எழுப்புதல் கண்டது- இரண்டும் சரவாக்கில்தான். 1973ல் பாரியோ எழுப்புதல், 1984ல் பாஹுகெலாலான். இரண்டும் மூன்று வருடங்கள் நீடித்தன. ஆனால் வெற்றிகரமாக இரண்டு சந்ததி கிறிஸ்தவர்களை எழும்பப்பண்ணிற்று.

பாரியோ எழுப்புதலானது, இடைநிலைப்பள்ளியின் ஒரு குழுவைச்சார்ந்த மாணவர்கள், தங்கள் பாவங்களை அறிக்கை செய்தனர். அப்போது மனந்திரும்புதலின் செயல், தீப்பொறியாய் பள்ளி வளாகத்தை தாண்டி, அருகாமையில் உள்ள கிராமங்களிலும், சந்ததிகளுக்கிடையிலும் பரவிச்சென்றது. சுவிஷேஷத்தின் தீ கொழுந்துவிட்டு எரிந்ததினால், கிராமங்கள் தோறும் முன்னேறியது.

பாஹுகெலாலான் புர்வீகத்தைச்சேர்ந்த லூன் பவாங்க்ஸ் புர்வீகம், ஆவிகளின் உலகத்தில் ஆழமாய் ஊடுருவினதினால், வியாதியினாலும் மதுவினாலும் பீடிக்கப்பட்டவர்களாய், பிரிட்டிஷாரால் அங்கேயே சாகக்கிடக்க கைவிடப்பட்டனர். 1930ல் நற்செய்தி அங்கே கொண்டு செல்லப்பட்டது. சபை வளர்ந்தது. 70களில் பெயரளவில் கிறிஸ்தவம் நுழைந்தது.

1984ல் எழுப்புதலுடன் அற்புதங்களும் அடையாளங்களும் இடம்பெற்றது. தண்ணீர் எண்ணையாகவும், அரிசி மாவாகவும் மாறி, வானில் தீப்பந்தமும் தூதர்கள் விஜயமும் நடைபெற்றது. அகுங் பங்காவ் என சொல்லப்படும் தேவனுடைய தாழ்மையுள்ள ஊழியன், முக்கிய நபராகக் காணப்பட்டார். 1904ல் வெல்ஷ் எழுப்புதல், 1906ல் அசுசா தெருவில் எழுப்புதல் வந்தது போல, பரிசுத்த ஆவியானவர், பாஹுகெலாலான் பகுதியில் பெருமளவு மனந்திரும்புதலும், மறுசீரும் கொண்டுவந்தார்.

நமது தேசத்தில் பெரிய எழுப்புதல் வரவேண்டும். மலேசியாவுக்காக உபவாச ஜெபம் ஏறெடுக்கும் இக்காலத்தில், தாழமையுடன் நொருங்குண்டவர்களாய் நமது கதறலை தேவன் கேட்டு, தேசத்திற்கு ஷேமம் வரவேண்டும்.

**ஜெபி:**

**மலேசிய மக்கள்குழுவினர்களுக்காக ஜெபி : டாயாக் டாயாக் சமுதாயத்தை தேவன் ஆசீர்வதிக்க, பாதுகாக்க, செழிப்படையச் செய்ய ஜெபி:** நீதியுள்ள டாயாக் ஆண்களும் பெண்களும், அரசாங்க ஸ்தானங்களிலும் அதிகாரத்திலும் வைக்கப்பட்டவர்கள், தங்கள் ஜனங்களை, வீடுகளையும் வளங்களை பாதுகாக்கவும் ஜெபி

ஆவிகளில் நம்பிக்கை வைத்துள்ள டாயாக் சாதியினரின் சங்கிலியை தளர்த்தி கிறிஸ்து சிலுவையில் கொண்டு வந்த விடுதலையை அவர்கள் அறிந்து கொள்ள ஜெபி.

# புதிய ஏற்பாட்டு எழுப்புதல்



உலகத்தின் பல முடுக்களிலிருந்து, யூதர்கள் படையெடுத்து பட்டணத்திற்கு வருகிறார்கள். அந்தக்கூட்டத்தினரை ஒழுங்குபடுத்த, மேற்கொண்டு பாதுகாப்பு தேவையாயிருந்தது. பெந்தேகோஸ்தே பண்டிகையைக்கொண்டாட ஆயிரக்கணக்கான ஜனங்கள் எருசலேமுக்கு வந்தவண்ணமிருக்கின்றனர்.

பட்டணத்தின் ஒரு சிறிய அறையில், 120 பேர்கள் கூடி உண்மையுடன் ஜெபித்துக் கொண்டிருக்கையில், பரிசுத்த ஆவியானவர் அவர்களை நிறைக்கிறார். அக்கினி மயமான நாவுகளைப்போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்கள் மேல் காணப்பட்டு, அந்நிய மொழிகளில் பேசி, அவர்கள் ஜனங்களை ஆச்சரியப்படுத்துகின்றனர். யோவேலின் தீர்க்கதரிசன வார்த்தைகளை பேதுரு பேசி, ஜனங்களுக்கு நினைவுறுத்துகிறார்.

அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன. அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். (யோவேல் 2:28)

அந்த நாளில் 3000 பேர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். மற்ற எழுப்புதல்கள், புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சமாரியாவில், பிலிப்புவினால் செய்தி கூறப்பட்டு, அநேகர் இரட்சிக்கப்படுகின்றனர். அவர்களில், சீமோன் எனும் பேருள்ள ஒரு மாயவித்தைக்காரனும் , காசாவுக்குப்போகிற வழியில் எத்தியோபியனாகிய ஒரு மந்திரியும் (அப் 8:5), அடங்குவர். எபேசுவிலே மாந்திரீகத்தில் சிக்குண்டவர்கள் அநேகர், வெளிப்படையாக மனந்திரும்பினர்.

கவனிக்க வேண்டிய விஷயம் - ஒவ்வொரு முறை எழுப்புதல் வந்தபோது, உபத்திரவமும் தொடர்ந்து காணப்பட்டது. நீங்கள் எழுப்புதலைத் தேடினால், மலேசிய திருச்சபைகள், தம்மை பலப்படுத்த, வல்லமையையும் தேடவேண்டும். எழுப்புதல் நம்மை பலப்படுத்துவது மாத்திரமல்ல, சோதனையில் உண்மையுள்ளவர்களாக இருக்கவும், நம்மை மாற்றும். அத்தகைய எழுப்புதலுக்கு நீ ஆயத்தமா?

ஜெபி:

**மலேசிய மக்கள்குழுவினர்களுக்காக ஜெபி : இபான்**
**இபான் சமுதாயத்தை தேவன் ஆசீர்வதிக்க, பாதுகாக்க, செழிப்படையச் செய்ய ஜெபி:**

இளம் இபான் மக்கள், தங்கள் விசுவாசத்தில் பலமாக இருந்து, தங்கள் குடும்ப சந்ததிகள் கர்த்தரை சேவிக்கும்படியாக ஜெபி.

இபான் குடிகள், விவசாய பயிற்சிகள் பெற்று, நவீன புத்தாக்க முறையில் பயிர் செய்து, அளவில்லா விதத்தில் அறுவடை செய்து, தங்கள் நிறைவுக்கும் பொருளாதார அந்தஸ்தை உயர்த்தவும் ஜெபி.

மேன்மையும் வெற்றிபெற்றவர்களுமாகிய இபான் மக்கள், தங்கள் சமூகத்தினரின் உரிமைகளுக்காக, போராட ஜெபி.

# எழுப்புதலில் தேவனுடைய மகிமை



மோசே, வழக்கம்போல தன்னுடைய மாமனார் யெத்ரோவின் ஆடுகளை மேய்க்கச்சென்றபோது, விநோத காட்சி ஒன்று அவனை ஈர்த்தது. ஒரு முட்செடி எரிந்துகொண்டிருக்க, அக்கினியினால் அச்செடி வெந்துபோகவில்லை. அதை என்னவென்று கவனிக்க அவன் கிட்டச்சேர்ந்தபோது, தேவ மகிமையை சந்தித்தவனாகிறான்.

பழைய ஏற்பாட்டில், தேவன் தன் மகிமையை, இஸ்ரவேலருக்கு பகலில் மேஸ்தம்பமாகவும் இரவில் அக்கினிஸ்தம்பமாகவும் வெளிப்படுத்தினார். அவருடைய மகிமையின் பிரவாகம், வல்லமையுள்ள எகிப்தியரை மண்டியிடச்செய்து, செங்கடலை இரண்டாகப் பிளக்கச்செய்தது. வனாந்தரத்தில் திரிந்த ஏறக்குறைய 30 லட்சம் பேர்களின் பசியை ஆற்றி, தாகத்தையும் தீர்த்தது.

சாலமோன் இராஜா கட்டின தேவாலயத்தின் மீது, தேவ மகிமை இறங்கினபோது, அதின் ஆசாரியன் உள்ளே நுழையக்கூடாமலிருந்தான். ஏசாயா தீர்க்கதரிசி, பரிசுத்த தேவனுடைய மகிமையை தரிசனத்தில் கண்டபோது, தனது நீதி கந்தையாக இருப்பதைக் கண்டான்.

அதே மகிமை இன்றும் நம்முடனே இருக்கிறது. அது எப்படி முடியும்? காரணம், சிலுவையில் இயேசு நமது பாவங்களை சுமந்து தீர்த்தபடியினால், பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணுகிற ஆலயமாக, நம் சரீரத்தில் இருக்கிறார். அவருடைய மகிமையின் பிரசன்னம், நம்மை உருமாற்றம் செய்து, நம்மைச்சுற்றிலும் இருக்கிறவைகளையும் உருமாற்றம் செய்கிறது. எழுப்புதல் கொண்டு வர, தேவன் நம்மை நிரப்பியுள்ளார். நமது சரீரத்தை, பரிசுத்த ஆவியானவர் தங்குகிற ஆலயமாக வைத்திருக்கிறோமா?

ஜெபர்:

**மலேசிய மக்கள்குழுவினர்களுக்காக ஜெபி : பிடாயு அண்மையில் முத்திரை பெற்ற ஒரு சம்பவம் - ஒரு பிடாயு மனிதன்,** அதிகாரப்பூர்வமாக கிறிஸ்தவத்திற்குத் திரும்ப அனுமதித்தது. இது ஒரு திருப்புமுனையாக இருந்து, இன்னும் பலர் இயேசு கிறிஸ்துவினுடைய விசுவாசத்திற்கு திரும்பும்படி ஜெபி.

**மாநில அரசாங்கத்தில் பணிபுரியும் பிடாயுக்கள்,** தேவ பயமும், தங்களுடைய செல்வாக்கையும் அதிகாரத்தையும், ஞானமாய் பயன்படுத்த ஜெபி. பிள்ளைகள் கர்ப்பமாவதைத் தடுக்க, திருமண வயதை 16 ஆக உயர்த்த, பிடாயு சமூகத்தின் தலைவர்கள் உத்தேசித்துள்ளனர்.

**பிடாயு குடும்பங்களை, தேவன் ஆசீர்வதிக்கவும், பாதுகாக்கவும் ஜெபி.** பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடைய கல்வியின் முக்கியத்துவத்தையும், அதின் தரத்தையும் மேம்படையச்செய்ய ஜெபி.

# எழுப்புதலின் பலன்கள்



எல்லா வித ஆராதனை முறைமைகளையும், எதேச்சையாக செய்வதும், எழுப்புதலுக்கு ஓர் அடையாளமாகும். ஜெபித்தல், பலனுள்ள வேலை, நேர்மையான வியாபாரம், தாராளமாய்க் கொடுப்பது, எல்லாவற்றிற்கும் மேலாக அதீத நிலையில் பாடுவது, எழுப்புதல் அடைந்த சமூகத்தினரின் நிலைப்பாடாய் இருக்கிறது. தேவனுடைய பிரசன்னத்தை, எழுப்புதல் அடைந்த சமூகத்தினர் மத்தியில், புதிதாக்கப்பட்ட ஆராதனை வேளை கொண்டு வருமானால், அதின் வழியாக சத்துருவானவனுடைய வலுவான கோட்டைத் தகர்த்தெறியப்படும்.

யோசபாத் இராஜாவைக் கவனிப்போம். இஸ்ரவேலை, மோவாபிய அம்மோனிய இராணுவம் தாக்கவும், நிர்மூலமாக்கிவிடும்படி மிரட்டவும் செய்தபோது,இராஜா பயந்து, கர்த்தரை நோக்கி முறையிட்டான். அப்பொழுது தேவன் ஒரு வார்த்தையைக் கொடுத்தார்.

சகல யதா கோத்திரத்தாரே, எருசலேமின் குடிகளே, ராஜாவாகிய யோசபாத்தே, கேளுங்கள். நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தா உங்களுக்குச் சொல்லுகிறார். இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது. (2 நாளா 20:15). யோசபாத் ராஜாவும் தன் ஜனங்களை தேவனைத்துதித்து பாடச் சொன்னான்.

- அவர்கள் பாடித் துதிசெய்யத் தொடங்கினபோது, யதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும்,மோவாபியரையும், சேயீா மலைத் தேசத்தாரையும், ஒருவருக்கு விரோதமாய் ஒருவரைக் கர்த்தா எழும்பப்பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள். ( 2 நாளா 20:22)

நன்றி செலுத்துதலும், துதியுமானது, தேவனை உயர்த்துவதும், எழுப்புதலுக்குரிய ஓர் ஆயுதமாகவும் காணப்படுகிறது. பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் வைத்து அடிக்கப்பட்டபொழுதும், ஆண்டவரைத் துதித்துப்பாடினார்கள். திடீரென பூமியதிர்ச்சி ஏற்பட்டு சிறைக்கதவுகள் திறந்தன.

அதேவிதமாக இன்று நமது ஜெபங்களும் விசுவாசத்தினால் நிறைந்து நமது சர்வ வல்ல தேவனுக்கு முன்பாக கொண்டு செல்லப்படுகிற தேசத்தின் சவால்களாக இருக்க வேண்டும்.

தேவனை ஆராதனை செய்யும் ஒரு ஜீவிய முறைமையை பயிற்றுவிக்கிறாயா?

ஜெபி:

**மலேசிய மக்கள்குழுவினர்களுக்காக ஜெபி : ஓராங் ஊலு சரவாக் மாநில அரசாங்கம், இப்போதைய சட்டத்தை முறியடிக்காமல், ஓராங் ஊலு மக்கள், தங்கள் வசிப்பிடங்களில் இருந்து, அவர்கள் நிலத்தை பண்படுத்த விட்டுவிடும்படி ஜெபி.** தற்போதைய சட்டத்தின் கீழ், ஓராங் ஊலுவின் நில உரிமைச் சட்டமானது, பாரம்பரியத்தின்படி, அடிப்படை உரிமைச் சட்டத்தின் கீழ் அமைந்துள்ளது. ஆனாலும் மர வெட்டு நிறுவனங்கள், அவர்கள் நிலத்தை பாழாக்கி, அந்த உரிமைகளை மீறி செயல்பட்டாலும்கூட, தண்டிக்கப்படாமல் இருக்கின்றனர். இந்த மக்களுக்குத் தெரியாமலேயே, இவர்களின் வசிப்பிட எல்லைகள், நிறுவனங்களுக்குக் வன சலுகைகளாகக் கொடுக்கப்படுகின்றன.

**ஓராங் ஊலு குடும்பங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் பாதுகாக்கவும் ஜெபி.** பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடைய கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்து, தாங்கள் ஒடுக்கப்படாமல் இருக்க, இந்தக்கல்வி இவர்களுக்கு உதவ ஜெபி.

இந்த ஓராங் ஊலு மக்கள், குறிப்பாக புறப்பகுதியிலே வசிக்கிறவர்களுக்கு சமத்துவ, நியாயமான கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட ஜெபி.

நாள்
35

செப்டம்பர் 10

# தேவனுடை சத்தம்: எழுப்புதலுக்குப்பின்



நான் முதலாவது 1993ல், பாரியோவை விஜயம் செய்தேன். நான் அங்கு சென்றடைந்தபோது, பாரம்பரியத்திற்குரிய மணிகளை மாலையாக அணிவித்து, வரவேற்றார்கள். காலஞ்சென்ற சட்டமன்ற உறுப்பினர் பாலன் செலின் அவர்களோடு பயணம் செய்தேன். இந்த பக்தியின் மனிதர்தான் 1973ஆம் ஆண்டு, இடைநிலைபள்ளி மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட மனந்திரும்புதலின் அசைவை இனங்கண்டு, அதனை எதிர்க்க வேண்டாம் என பெரியவர்களுக்கு ஆலோசனைக் கூறினவர். அதன் பின்னர்தான் எழுப்புதல் பரவிற்று.

நான் அங்கு கழித்த வாரத்தில், அதின் சூழ்நிலை, தெய்வீகத் தொடுதலின் நேரமாக இருந்தது. 1973 முதல், ஒவ்வொரு நாள் அதிகாலை 5.00 மணிக்கு ஜெபத்திற்கு மணியோசை எழும்பிவிடும். பிறகு தேவனுடைய அக்கினி முதன்முதலில் விழுந்த அந்த வகுப்பறையை எனக்குக் காண்பித்தார்கள். எழுப்புதலின் விளைவை குறிப்பிட்டுச் சொல்லப்போனால் சாதாரண மாணவர்களை சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றதும் அதின் விளைவாக நாட்டின் மிகவும் செல்வாக்கு மிக்க ஸ்தானத்தை அடைந்ததுமாக காணப்பட்டார்கள்.

ஒவ்வொரு மாலையும், நெருப்பை சுற்றி அமர்ந்து, அந்த கிராமத்து பெரியவர்கள் பகிர்ந்துகொண்ட, அவர்களது முதல் அனுபவ சாட்சிகளைக் கற்றறிந்தேன். நான் சில கூட்டங்களில் பேசினேன். என்னுடைய அறிவாற்றல் போதுமான அளவு இல்லாவிட்டாலும், வார்த்தைகளை பகிர்ந்து கொள்வதில் மிகப்பெரிய விடுதலை எனக்குக் கிட்டியதை உணர்ந்தேன்.

2011ல் மறுபடியும் பாரியோ சென்றபோது, பல மேம்பாடுகள் அடைந்திருந்தது. வரவேற்பு அன்று போலவே இருந்தாலும் ஆவிக்குரிய நிலைமை மாறியிருந்தது. 1973ன் மாணவர்கள் அப்போது பாரியோ தலைவர்களாக இருந்தாலும், அந்தக்காலக்கட்டத்தில் இரண்டு தலைமுறைகள் கடந்து போயிருந்ததில், அவர்கள் எழுப்புதலை அனுபவிக்கவில்லை. அநேக வாலிபர்கள், ஆவிக்குரிய ரீதியில் உலர்ந்து போயிருந்தனர். அநேகர் பட்டணங்களுக்கு வேலை நிமித்தம் குடிபெயர்ந்தும், இன்னும் பலர் பின்வாங்கியும் போயிருந்தனர். எழுப்புதல் அவசியம்தான், ஆனால் அதுவே எல்லாவற்றிற்கும் பதில் கிடையாது. சபையானது எழுந்து, சந்ததியை சீஷத்துவத்திலும், தனிநபர் எழுப்புதலிலும், ஜெபத்திலும் வழிநடத்திச்செல்வதில் உடனடி கவனம் செலுத்த வேண்டும். இரட்சிப்பின் தேவனே! நீர் எங்களை திருப்பிக்கொண்டு வாரும் (சங்கீதம் 85:4) என்று சங்கீதக்காரன் கூறுகிறான். உன் வாழ்க்கையின் என்னென்ன பகுதிகளை தேவன் திருப்பிக்கொண்டு வர வேண்டும்?

ஜெபி:

**மலேசிய மக்கள்குழுவினர்களுக்காக ஜெபி : கடாசான் டுசுன்**

சம அளவு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் கடாசான் டுசுன் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவேண்டும். உள்பகுதியில் வாழும் எந்தப் பிரிவினரும் ஓரங்கட்டப்படாமல், இன்னும் அதிக முயற்சி செய்து, ஏற்றம் காணச்செய்ய வேண்டும் என ஜெபி.
கடாசான் டுசுன், இயேசுவுடன் தனித்த ஒரு சந்திப்பு இடைபடுதல் ஏற்பட்டு, அவரை முழுமையாக பின்பற்றவேண்டும். ஸ்தலத்தில் காணப்படும் குழுக்கள் ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்தி ஆவிக்குரிய கட்டுகளிலிருந்தும், சடங்குகளிலிருந்தும் உடைத்தெறிய வேண்டும்.

## எழுப்புதல் வரும்போது அவர் சாமாதானத்தைப் பேசுவார்



கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன். அவா தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார். அவர்களோ மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்பார்களாக(சங்கீதம் 85:8)

எண்ணாகமம் 6:25-26, யோவான் 14:27, ரோமர் 5:4, சங்கீதம் 34:14 வாசி

தேவன் நமது மனந்திரும்புதலுக்கும், நொறுங்குண்ட நிலைமைக்கும் மறுமொழியாக தமது இரக்கத்திலும், கிருபையிலும் மறுமொழி கொடுப்பதே எழுப்புதல் ஆகும். அவருடைய மன்னிப்பை அருளி, அவருடைய அன்பினால் நம்மை தழுவிக்கொள்கிறார். அவருடைய மவுனத்தைக் கலைத்து, நம்முடன் பட்சமாய் பேசுகிறார். நமது கீழ்ப்படியாமையினாலே, அவருடைய முகத்தை அவர் திருப்பிக் கொள்ளவில்லை, இப்பொழுதோ, தமது பரிவு, ஆறுதல், ஊக்கம், ஆசீர்வாதம், இவற்றை நமக்குக் கட்டளையிடுகிறார். பழையவை மறக்கப்பட்டு புதிய அசைவு துவங்குகிறது. முதலாவது அவர் நம்மைத் தழுவி அவரது அன்பில் மிதக்கச்செய்கிறார்.

தேவனுடன் சமாதானம் கொள்வதற்கு ஈடு கிடையாது. நாம் தேவனுடன் சமாதானம் தேடும்போது நமக்குள் நாம் சமாதானம் கொள்கிறோம். அது விலை மதிப்பற்றது. அது விடுதலை தருவது.

அப்படிப்பட்ட தருணங்களில் நாம் பின்வாங்கிப் போகாமலும் நமது மதிகேட்டினால் நாம் அவரை மறுபடியும் கோபப்படுத்தாமலும் இருப்போமாக. மாறாக நாம் பரிசுத்த கனத்துடனும், ஆழமான நன்றியறிதலுடனும் நிறைந்திருப்போமாக. அவருடைய வாக்குகளை நம்பி அவருடைய கட்டளைகளை பின்பற்றுவோமாக.

நீ இன்னும் தத்தளித்துக்கொண்டு, தார்க்குச்சிக்கு எதிராக உதைத்துக்கொண்டிருக்கிறாயா? அல்லது அந்த சமாதானம் உன் உள்ளத்தில் வந்துவிட்டதா? அந்த சமாதானமே உன் விசுவாசத்தின் அடையாளச் சின்னமாக இருப்பதாக.

ஜெபி:

**மலேசிய மக்கள்குழுவினர்களுக்காக ஜெபி : பாஜாவ் லாவுட் பாஜாவ் லாவுட் மக்கள் கடற்வாசிகள் என அழைக்கப்பட்டு தங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதி படகிலும், சமுத்திரத்தை நம்பியே ஜீவனம் செய்கிறவர்களாகவும் இருக்கிறார்கள்.**

இவர்களில் சிலர், மலேசிய எல்லைகளிலும், பலர் மாநிலமின்றி, முறையான அடையாள பத்திரமுமின்றி, கல்வியறிவு இல்லாமலுமிருக்கிறார்கள். இருமக்கள் இயேசுவின் அன்பை அனுபவித்து, இவர்களும் தேவனுடைய பிள்ளைகள் என்றும், இவர்களுடைய நித்திய குடியிருப்பு பரலோகத்தில் உண்டு எனவும் அறிந்து கொள்ள ஜெபி.

மலேசிய அரசாங்கள் இன்னும் அதிக முயற்சிகள் எடுத்து இந்த சமுதாயத்தை அங்கீகரித்து, பாதுகாத்து, இவர்களுடைய பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் பயிலுவதற்கு சேர்த்துக்கொள்ளப்பட ஜெபி.

# எழுப்புதல் வரும்பொழுது



தேவனுடைய மகிமை தேசத்தில் வாசம் பண்ணும்

நம்முடைய தேசத்தில் மகிமைவாசமாயிருக்கும்படி, அவருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது(சங்கீதம் 85:9)

எசேக்கியேல் 10-11, 1 சாமுவேல்ட 4:19-22, ஏசாயா 4:5, சகரியா 2:5, சங்கீதம் 51:11 வாசி

எருசலேமின் விழுகைக்கு முன்பதாக, எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு, கர்த்தருடைய மகிமை, அந்த தேசத்தை விட்டு விலகுகிறதை, ஒரு தரிசனத்தின்வழி காண்பித்தார். தேவனுடைய மகிமையே, எருசலேமை அதின் எதிரிகளிடமிருந்து காப்பாற்றியது. தேவமகிமை அவர்களை விட்டுச்சென்றபோது எருசலேம் அழிக்கப்பட்டது.

தேவ மகிமையானது வெளிப்படுத்தப்பட்ட பிரசன்னமாயிருக்கிறது. தேவ பிரசன்னம் இருக்கிற இடத்தில், சமாதானமும் விடுதலையும் உண்டு. அவருடைய பிரசன்னத்தின் தொடுதல் மறுசீரமைப்பைக்கொண்டு வருகிறது.

ஒரு தனிநபரையோ, தேசத்தையோ, அதின் இலக்கிற்கு கொண்டுசெல்வது தேவ மகிமையே. அவருடைய மகிமை இல்லாது எந்த ஒரு தேசமும் அதின் அழைப்பை நிறைவேற்ற முடியாது. எங்கே அவருடைய மகிமை தங்குகிறதோ, அவருடைய ஒத்தாசையும் ஆசீர்வாதமும் பெருகி, வெளிப்படுகிறது. ஆனால் எங்கே அந்த மகிமை காணப்படவில்லையோ மரணமும் இருளும் ஆட்சி செய்யும்.

எனவே தேவ மகிமையை, நம் வாழ்க்கையை விட்டு நாமே விரட்டிவிடாதிருக்க எச்சரிக்கையாயிருப்போம். அவரை ஆவலுடன் ஏங்கி அவரைத்தேடுவோமானால் அவர் நம்மிலும் நம்மோடும் நிலைத்திருப்பார். தேவ மகிமை நமக்குள் ஜீவிக்கும்படியான பசியை எப்படி காத்துக்கொள்வாய்?

ஜெபி:

**மலேசிய மக்கள்குழுவினர்களுக்காக ஜெபி : மூரூட்**
**மூரூட் மக்களை கர்த்தர் ஆசீர்வதித்து, அவர்களுக்குள் எழுப்புதல் அனுப்பி, செழிப்படையச்செய்ய ஜெபி.**

தங்கள் கிராமங்களை விட்டு, வாய்ப்புகளைத் தேடி, பெரிய பட்டணங்களுக்குசெல்லும் இம்மக்கள், தங்கள் -ரட்சிப்பை காத்துக்கொள்ளவும், மற்றவர்களுக்கு அவர்கள் ஆசீர்வாதமாகவும் சத்தியத்தை பகிர்ந்துகொள்ளவும் தேவன் அவர்களை பயன்படுத்த ஜெபி.

## எழுப்புதல் வரும்போது சத்தியம் மேலே துளிர்க்கும்



சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும் (சங்கீதம் 85:11)

நீதிமொழிகள் 12:22, எபேசியர் 4:15 25, சங்கீதம் 119:142, யோவான் 14:6 வாசி

எழுப்புதல் வரும்பொழுது, தேசத்தில் சத்தியம் நிலைப்படும். அவருடைய ஒளி ஒவ்வொருவருடைய கண்களையும் திறந்து, ஒவ்வொரு பொய்யையும் வெளியரங்கமாக்கும். பொய்யர்கள் தங்கள் நேர்மையற்ற ஜீவியத்தை விட்டு திரும்புவர். பொய்கள் சமுதாயத்தால் நிராகரிக்கப்படும். சாத்தான் வஞ்சிக்கும் தன்னுடைய ஸ்தலத்தை இழப்பான், இருள் இந்த தேசத்தை விட்டே துடைத்தொழிக்கப்படும். உத்தமம் போற்றப்பட்டு வஞ்சனை இழிவாக்கப்படும்.

எழுப்புதல் வரும்பொழுது, வேதம் பரவலாக வாசிக்கப்படும், அதின் செய்தி உண்மையென அங்கீகரிக்கப்பட்டு மற்றவை யாவும் பொய் என எல்லாருக்கும் பறைசாற்றப்படும். தேவ வசனம், பண்பட்ட நிலத்தில் முளைத்து, நீதியின் கனியை விளைச்சல்பண்ணும்.

எழுப்புதல் வரும்பொழுது, தேவ ஊழியர்கள் அணுகப்பட்டு, மகத்தாக கனப்படுத்தப்படுவார்கள். தேவ வார்த்தையாகிய சுவிசேஷத்தை, ஏந்திக்கொண்டு செல்லுகிற பாதங்கள், எவ்வளவு அழகானவை என எழுதியிருக்கிறது. அவர்கள் சத்தியத்தின் தூதுவர்களானதால், அதிகம் மதிக்கப்படுவார்கள். அநேகர் அவர்கள் பாதத்திற்கு படையெடுத்து சத்தியத்தில் வளருவார்கள்.

எழுப்புதல் வரும்பொழுது,  இயேசு கிறிஸ்து உயர்த்தப்பட்டு ஆராதிக்கப்படுவார். அவரே வழி, சத்தியம் ஜீவன் என அறிக்கை செய்யப்படுவார். சத்தியத்தின் வடிவமாய் இருக்கிற அவரிடம், நித்திய சுதந்திரமும், அவரை அறிந்துகொள்ளுதலும் கிட்டும். ஆனால் நாம் சத்தியத்தை நேசிக்கிறவர்களா அல்லது நமது நாவு பொய்யினாலும் வஞ்சகத்தினாலும் கறைபட்டு இருக்கிறதா என, நாம் நம்மை கேட்டுக்கொள்ளவேண்டும்.

ஜெபி:

**மலேசியாவிற்காக ஜெபி: பொருளாதாரம்**

**பேங்க் நெகாரா மற்றும் நிதி நிறுவனங்கள்.** தேவன் இந்த தேசத்திற்கு அருளின ஐசுவரியத்தை, ஞானத்தோடு நிர்வாகம் பண்ண ஜெபி. கையாடலும் சுரண்டலும் இல்லாதபடிக்கு ஜெபி.

தங்கள் பிள்ளைகளுக்கு வேண்டி, தேசத்தின் எதிர்கால பொருளாதார பாதுகாப்பைக்குறித்துக் கவலை கொள்கிற குடும்பங்கள், தேசத்தில் குடியிருந்து, சத்தியத்தை மேய்ந்துகொள்ளும்படி ஜெபி (சங்கீதம் 37.3)

கர்த்தாவே, தீங்கு செய்கிறவர்களைக்குறித்து எரிச்சல்கொள்ளாமல் நீதிமான்கள் தேசத்தை சுதந்தரித்துக்கொள்வார்கள் எனும் எங்கள் நம்பிக்கையை உறுதியாய் உம்முடைய வாக்குகள் மீது வைத்துள்ளோம்.

பசியுற்றோற்கு உணவும், நிர்வாணிகளுக்கு ஆடையும், வியாதியுற்றோர்களுக்கு பராமரிப்பும், எளிமையானவர்களுக்கு சுவிஷேமும் கொண்டு செல்லும் உணர்வை, சபையானது உருக்கத்துடனும், உணர்த்துதலோடும் பெற்றுக்கொள்ள ஜெபி.

நாள் 39

செப்டம்பர் 14

# எழுப்புதல் வரும்போது, நீதி புமியில் பெய்யும்



நீதி வானத்திலிருந்து தாழப்பார்க்கும (சங்கீதம் 85:11)

மத்தேயு 6:33, ரோமர் 6:13, யூஉவள 3:19, 2 கொரிந்தியர் 5:21, சங்கீதம் 23:3 வாசி

நீதியாயிருப்பதென்பது, தேவனுடைய நன்னெறியைக் கொண்டிருப்பதாகும். எழுப்புதலில், தேவனுடைய நற்பண்புகள், சமுதாயத்திற்கு திரும்ப வருகிறது. சமுதாயத்தின் ஊழலும் செத்த மனசாட்சியும் திரென உயிர்ப்பிக்கபட்டு, மனிதன் தன் அநீதியான கிரியைகள் மற்றும், பழக்க வழக்கங்களின் மீதும் எரிச்சல் கொண்டு, பரிசுத்த தேவனிடம் திரும்புகிறான். இதிலிருந்து விடுதலையாவதற்கு ஒரே வழி, அவர்கள் காயப்படுத்தின ஒரே தேவனிடம் திரும்பி, இரக்கத்திற்கு கெஞ்சி, அவருடைய பாதைக்குத் திரும்புவதுதான். மனந்திரும்புதலிலும், நறுங்குண்ட மனதோடும் வரும்போது, பரிசுத்த ஆவியானவர் அவர்களின் இருதயத்தை தேவனுக்கு நேராகத் திருப்புகிறார். பின்னர் தேவனுடைய நற்பண்புகள் அறிக்கைசெய்யப்பட்டு, அரவணைக்கப்படுகிறது.

மனிதன் தேவனிடம் மனந்திரும்பி வரும்பொழுது, பரத்திலும் ஒரு மாற்றம் நிகழுகிறது. தேவன் மனிதனை கீழ் நோக்கிப்பார்த்து, தமது இரக்கத்தையும் மன்னிப்பையும் நீட்டிக்கிறார். சிலுவையின் வேலைப்பாடு பாவியின்மேல் கிரியை செய்து மனிதன் நீதிக்குள்ளாய் மறுபடியும் மாற்றப்படுகிறான்.

புதிய இருதயத்தையும் துவக்கத்தையும் மனிதம் பெறும்பொழுது, அவன் நீதியின்மேல் வாஞ்சை கொண்டு, பாவத்தைக் கைவிடுகிறான். நீதிமான் திரும்பவும் உயர்த்தப்பட்டு, துன்மார்க்கர் வெட்கப்பட்டுப்போகின்றனர். தேசம், இனியும், வன்செயலும் ஊழலும் நிறைந்து காணப்படாது. மாறாக தேவ சமாதானத்தாலும் தேவ ஒளியாலும் நிறைந்து காணப்படுகிறான். உன் இருதயமும், சிந்தையும் இந்த புதுப்பித்தலுக்கு ஆயத்தமாகக் காணப்படுகிறதா?

ஜெபி:

**மலேசியாவிற்காக ஜெபி: நீதித்துறையும் சட்டமுறைமையும்**

**நீதித்துறையின் முழுமையான சுதந்தரத்துக்காக ஜெபி:** நீதிமன்றங்களில் தீர்ப்புகள், அனுதினமும் நியாயம் நீதி நிறைந்தவையாக இருக்க ஜெபி.

**நீதித்துறை ஊழலுக்கு அப்பாற்பட்டு இருக்க ஜெபி.** அவர்கள் விலை கொடுத்து வாங்கப்படாதபடியும், லஞ்சம் மற்றும் தயவு பெறுவதை மறுக்கிறவர்களாகவும் இருக்க ஜெபி.

**தெய்வபயமுள்ள நீதிபதிகள், நீதிமன்ற பணியாளர்கள், வக்கீல்களுக்காக ஜெபி:** கிறிஸ்தவ வழக்கறிஞர்கள் இராஜ்ஜிய சிந்தையுள்ளவர்களாய் நிறைந்து, நீதியையும் நியாயத்தையும் மற்ற எல்லாவற்றிற்கும் மேலாக வைத்து கடமையை செய்ய ஜெபி.

## எழுப்புதல் வரும்போது, தேசம் தன் விளைச்சலை அதிகரிக்கும்.



கர்த்தா நன்மையானதைத் தருவார். நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும். (சங்கீதம் 85:12)

யோவேல் 2:18-32, ஏசாயா 54:1-3, உபாகமம் 30:1-10 வாசி

எழுப்புதலோடு, பருவத்திலும் ஒரு மாற்றம் வரும். பூமிக்கு ஊற்று புதிய ஜீவனைக்கொடுப்பதுபோல, எழுப்புதலும், காரிருளை நீக்கி தேவனுடைய பிரசன்னத்தை பூமிக்கு கொண்டுவருகிறது. தேவ பிரசன்னம் சூரிய ஒளி போல பூமியை உயிர்ப்பித்து, விளைச்சலைக்கொண்டு வரும். தாவரங்கள் பழங்களையும், பிராணிகள் தங்கள் வர்க்கத்தை உற்பத்தி செய்தும் பூமி தன் பலனையும் தரும்.

ஜெபங்கள் பதிலளிக்கப்படும். துக்கம்-களிப்பாகவும், அழுகை-நகைப்பாகவும் மற்றும். கனவு நனவாகவும், முடியாததவை சாத்தியமுமாகும். விதைப்பு அறுப்பையும், ஏழ்மை நிறைவுமாகும்.

இருதயங்கள் கர்த்தரிடத்தில் திரும்பி, மனம் வருந்துவோர் சபையின் பீடங்களை நிரப்புவர். சபைகள் பரிசுத்தவான்களால் நிறைந்து, தெருக்கள் குற்றச்செயல்கள் இல்லாததாய் மாறும். ஒவ்வொரு பணியும் செழிப்பாகி, எல்லா தேவைகளும் புர்த்தி செய்யப்படும். எல்லாத்திறன்களும் உணரப்பட்டு, ஒவ்வொரு இலக்கும் வெளிப்படையாகும். மலேசியாவிற்கான நம்பிக்கை உயிர்ப்பெறச்செய்ய ஆண்டவரிடம் கேட்போம். இதைத் தொடர நீ ஆயத்தமாயிருக்கிறாயா? அதற்கான விலையை கொடுக்க முன்வருவாயா? வா நாம் ஒன்றாய் ஓடி தேவனுக்கு வழியை இணைந்து ஆயத்தப்படுத்துவோம்.

ஜெபி:

**மலேசியாவிற்காக ஜெபி: மலேசியாவின் சபைகள்**

நீதி ஒரு தேசத்தை உயர்த்தும். அநீதி உள்ளுக்குள்ளேயே அழிக்கும். நமது தேசத்தில் நியாயம் தண்ணீரைப்போலவும், நீதி வற்றாத நதியைப்போலவும் புரண்டு வரக்கடவது. (ஆமோஸ் 5:24).

தேவன் தம்முடைய சர்வ வல்லமையில் எல்லா இருளையும் உடைத்து, தமது இராஜ்ஜியம் ஊடுருவிச்செல்ல ஜெபி. அனைத்து தடைகளும் அகற்றப்பட்டு, அவருடைய சபை, அவருடைய நித்திய நோக்கத்தை நிறைவேற்றும்படி முன்னேறிச்செல்ல ஜெபி.

இயேசு எதற்காக வாழ்ந்து, ஊழியம் செய்து, பாடுபட்டு மரித்தாரோ அந்த அவருடைய நோக்கமாகிய -ராஜ்ஜியத்தின் முழுமையான தரிசனத்தை பிடித்துக்கொள்ள சபைகளின் கண்கள் திறக்கப்படட்டும்.

தேவ இராஜ்ஜிய வாழ்க்கை பாணி, தெய்வீக மனப்போக்கு, வேதத்தைச் சார்ந்த மதிப்பீட்டுமுறைமை, கிறிஸ்துவை மையமாகக்கொண்ட சிந்தனை - இவை மறுபடியும் திரும்பி வர ஜெபி. தலைமைத்துவத்தில் உள்ளவர்கள், கிறிஸ்துவைப்பின்பற்றி ஊழியம் கொள்ள வராமல் ஊழியம் செய்ய வர தாழ்மையான கீழ்ப்படிதலில் நடக்க ஜெபி.

ஒப்புதல்

இந்த புத்தகக் கையேடு உருவாக, தங்கள் நேரத்தையும் பிரயாசத்தையும் ஜெபத்தோடு எழுதின தேவதாசர்களுக்கு நன்றி. தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

| | | |
|---|---|---|
| தேவ கோபாக்கினை | : | போதகர் ஆங் சியூவ் கிம் |
| தேவ இரக்கம் | : | குமாரி கோ போ காய்க் |
| எழுந்து கட்டு | : | மறைத்திரு லூய் கொக் கிம் |
| ஜெப பீடங்கள் | : | போதகர் டாக்டர் லியூ லீ சியூவ் |
| தேவ சத்தம் | : | மறைத்திரு காபிரியேல் ஜெபநாதன் |
| எழுப்புதல் | : | போதகர் டாக்டர் பிலிப் லியன் |

**40-நாள் உபவாசம் & ஜெபம்**

2016

7 ஆகஸ்ட் - 15 செப்டம்பர்

**National Evangelical Christian Fellowship (NECF) Malaysia**
32, Jalan SS2/103, 47300 Petaling Jaya, Selangor Darul Ehsan.
Tel: +603-7727 8227 | Fax: +603-7729 1139
Email: enquiries@necf.org.my | Website: www.necf.org.my